ஸ்ரீ ஆயிரங்கண் மாரியம்மன்
ஸ்தோத்திர பாமாலையும்
கும்மி பாட்டும்

உ

சிவமயம்.

அம்பிகை துணை.

அருப்புக்கோட்டையைச் சேர்ந்த

புளியம்பட்டியில்சாலிமகாரிஷி கோத்திரத்தவர்கள்

தெப்பக்குளத்துக்கு வடபாற்றிருக்கோயில்

கொண்டு விளங்கும்

ஸ்ரீ ஆயிரங்கண் மாரியம்மன்

தோத்திரப்பாமாலையும்

கும்மிப்பாடலும்.

இவை

ஷை அருப்புக்கோட்டை தெற்குரதவீதி, தேவாங்கர்குலம்

மகா-ா-ா-ஸ்ரீ

தொ. ச. சவுடப்ப செட்டியார்

அவர்களால் இயற்றப்பெற்று

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன.

1924

ருதிரோத்காரி வருஷ [illegible]கமீ

இதன் விலை அணு 10.

உ

சிவமயம்.

அம்பிகை துணை.

அருப்புக்கோட்டையைச் சேர்ந்த

புளியம்பட்டியில்சாலிமகாரிஷி கோத்திரத்தவர்கள்

தெப்பக்குளத்துக்கு வடபாற்றிருக்கோயில்

கொண்டு விளங்கும்

ஸ்ரீ ஆயிரங்கண் மாரியம்மன்

தோத்திரப்பாமாலையும்

கும்மிப்பாடலும்.

இவை

ஷ அருப்புக்கோட்டை தெற்குரதவீதி, தேவாங்கர்குலம்

மகா-ள-ள-ஸ்ரீ

தொ. ச. சவுடப்ப செட்டியார்

அவர்களால் இயற்றப்பெற்று

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன.

1924

ருதிரோற்காரிஹ தைமீ

இதன் விலை அணா 10

இந்நூலை அச்சிற் பதிப்பித்து அரங்கேற்றும்படி செய்தவராகிய
அருப்புக்கோட்டையைச் சேர்ந்த புளியம்பட்டி
சாலிமகாரிஷி கோத்திரம் மகா-௱-௱-ஸ்ரீ

கு. பொ. கு. சு. பொ.

பொன்னம்பலம் அன் கோ அவர்களை

வியந்து கூறியது.

சீர்பொருந்துஞ் சாலிமகா முனிவார்தன் திருமாபு
செழிப்புற் றோங்கச்
செய்யதிருப் பாற்கடலின் மதியுடன்வா னமுதமது
செனித்தாற் போல
ஏர்பொருந்துங் குற்றால லிங்கமகி பதிமுனந்தா
னினிதாய்ச் செய்த
இணையில்பெருந்தவப்பயனுலெழிலனைத்துமோருருக்கொண்
டெனவே தோன்றிக்
கார்பொருந்து மைந்தருவு நாணிவிசும் பதனிலுறக்
காண்போர் யார்க்கும்
கனகமழை பொழிவதென வழங்குமிரு காதலங்கொள்
கருணை நேயன்
பார்பொருந்துந் தனபதியாய்ப் பகர்ந்திடுபோன் னம்பலபூ
பதியென் றென்றும்
பாவுபுக ழிசைமிகுந்தே தருமமுடன் றயாளகுணம்
படைத்த பூமான்

ஓங்குபுகழ்ச் செங்கமலத் திருமடந்தை குடிகொண்ட
வுயர்ந்த சீமான்
உண்மைமிகுங்கலைஞானமுழுதுணர்ந்துதமிழ்ச்செல்வர்க்
குதவுஞ் செல்வன்
தேங்குபுனல் மெய்ஞ்ஞான தீர்த்தமருங் கமரரெலாந்
தினமும் போற்றுந்
தெய்வமுமாயன்னையுமாய்ச்செல்வமெலாங்கொடுத்தருளுந்
திருவு மாகி
ஆங்குவளர் மாரியம்மன் தோத்திரப்பா மாலைதனை
யரங்க மேற்றி
அன்பரெலாந் துதித்தரிய பவந்தீர்த்துப் பேரின்ப
வமுத மாந்திப்
பாங்குபெறும் பொருளினொடு நன்மையெலாம் பெற்றிடவிப்
பனுவல், தன்னைப்
பாருலகோர் கொண்டாட அச்சியற்றிப் புகழனைத்தும்
படைத்தான் மன்னே. (2)

உ

சாற்றுக்கவிகள்.

அருப்புக்கோட்டையைச்சேர்ந்த புளியம்பட்டி மகா-ள-ள-ஸ்ரீ
புராணிகர் சொ. சண்முகசுந்தரம் பிள்ளையவர்கள்
இயற்றியது.

கல்வியுள்ளார் செல்வமுள்ளார் கலைவிரித்தோர் புகழ்தரித்தோர்
கடவுள் பத்தி
கருத்திலுறு பெருத்தசன முறுக்குடையர் மிகக்கொடையார்
கள்ளஞ் செல்லார்
மல்கியுள்ளோர் சாலியர்கள் மருவுநல்லூர்ச் சுவேதபுரம்
வனப்பு வாய்க்க
வகுத்ததளி யகத்துளரி யுகைத்ததிறன் மிகுத்தவெங்கள்
மாரித் தாய்க்குப்
பல்கியசெந் தமிழ்க்கதம்பப் பாமாலை சூட்டியருட்
பரிசு பெற்றான்
பணப்பெருமை யினப்பெருமை குணப்பெருமை மிகுத்திடுவிற்
பனத்தே வாங்கர்
நல்குலத் தவன்பத்தி சுத்தியுற்றோன் சவுடப்ப
நாமம் பெற்றோன்
நயப்புலவர் வியக்குசெயுள் பலப்பலவு நொடிக்குளுரை
நாவல் லோனே.

புளியம்பட்டி ஸ்கூல்மானேஜர் மகா-ள-ள-ஸ்ரீ
வள்ளிநாயகம் பிள்ளையவர்களியற்றியது.

பாரேந்து செஞ்சொற் பழங்கவிக ளூறப்
பைந்தமிழ்ப் பனுவன் மாலை
பழமறைக டொழுதெழுங் குழவிமதி தவழ்சடைப்
பாமனுக் குரிய பரையாய்த்

தாரேந்து பைங்குழற் கற்றையிடை வான்மதி
தழைத்ததென நகை வதனமும்
தண்ணளிகொ ளாயிரங் கண்மாரி யம்மையித்
தாரணி யுவக்கு மென்தாய்

போரேந்து பூழியர்கள் தோளேந்து புளியநகர்ப்
புனிதமா தவர் துதிக்கும்
புகழேந்து நங்குமரி ஞானவா விக்கண்வளர்
பொற்பாவை யன்னை மீதில்

சீரேந்து தேவாங்கர் மரபில்வரு சவுடப்ப
செல்வத் தமிழ்ப் புலவனும்
தேனுந்து பாமாலை மணிமாலை யின்மேற்
செழிக்கப் புனைந்தா னரோ.

ஸ்ரீமத் புராணிகர் சொ. சண்முகசுந்தரம் பிள்ளையவர்கள்
மாணாக்கரிலொருவராகிய மகா-ா-ா-ஸ்ரீ அருப்புக்கோட்டை

திரு. சிறைமீட்டியா பிள்ளையவர்களியற்றியது.

திருவளரும் நல்லையம் பதியில்வளர் தேவாங்கர்
திவ்யகுல வித்வ ஞானச்
செந்தமிழ்க் கவிவல்ல தீரனுஞ் சவுடப்ப
சிம்மேறு தேன் றுளிக்கும்

மருவளரும் புன்னைமா தென்கமுகு பொங்கர்நறு
மாவயல்கள் சூழ்ந்து மேநல்
வானாடு நிகரான மாபுளிய மாநகரில்
மாதவ ரிறைஞ்சு மென்தாய்

அருள்வளரு மோங்கார பிரணவசொ ரூபியாம்
ஆயிரங் கண்க ளுற்ற
அம்பிகை மாரியம் மன்மீது பாமாலை
யன்புட னுகந் தணிந்தான்

தருவளரும் விண்ணோர்கள் தமிழ்முனிவ மேனையோர்
சகலகலை வல்லோர் களும்
தாணிதனி லினியகட லுண்டவான் மேகமே
தமிழ்மாரி பெய்த தெனவே.

அருப்புக்கோட்டைச் சேகரம் புளியம்பட்டி,பொன்னுச்சாமிபுரம்
தெரு, சாலிமகாரிஷி கோத்திரம், சோசியம் மகா-ள-ள-ஸ்ரீ
சி. சோமசுந்தர மூப்பனாரவர்களியற்றியது.

ஒலிருந்த சுருப்புமலர் மாலை தன்னை
யுரைப்பருலர் மாலையென வுணர்ந்தோ னாகி
மேலிருந்த வமரர்தொழு மாரி யம்மன்
மென்மலர்த்தாட் கொண்டமிழ்ப்பா மாலை வேய்ந்தான்
நூலிருந்த வெண்மைபன்மை வருண மாக்கி
நுண்கலைசெய் சவுடப்ப னுவலும் வாணி
தாலிருந்தோன் பனுவலினு ரமுத மாந்தித்
தகமையுட னுலகமெலாந் தழைப்ப மாதோ.

புளியம்பட்டி மகா-ள-ள-ஸ்ரீ சாலிமகாரிஷி கோத்திரம்
சு. கந்தசாமி மூப்பனாரவர்களியற்றியது.

ஞான வாவித் தடங்கரையில்
நல்லோர் தொடுக்கும் பூமலர்க்கும்
நளினப் பொகுட்டி லுறைவாணி
நங்கை தொடுக்கும் பாமலர்க்கும்
தானே காதற் பெருக்கதனைச்
சகஸ்த்ர நயனக் குறிகாட்டித்
தக்கோர் புகழ்நல் லூர்சாலும்
தகவார் புளிய நகர்க்கோவில்
மானேர் நோக்கி யாயிரங்கண்
மாரியம்மை பதாம்புயத்தில்
மறையோர் சமய குரவரைப்போல்
மகிமை பெறவே புகழ்ந்தணிந்தான்

தேனார் பகுதிச் சுவைபலனைத்தும்
திரட்டிப் பாடற் பகுதியவாய்ச்
செல்வப் பெருக்கார் தேவாங்கர்
திருமா மாபுச் சவுடப்பனே.

புளியம்பட்டி சாலி மகாரிஷி கோத்திரம் சோசியம் மகா-ா-ா-ஸ்ரீ
வெங்கடாசல மூப்பனாரவர்களியற்றியது.

எங்குநிறைந் துயிர்க்குபிரா யிகபரபோ கங்களெலா
மினிது நல்கும்
பொங்குமெழி லாயிரங்கண் பொருந்துமெம தன்னையின்மேற்
புகழே வாய்ந்த
துங்கமிகும் பாமாலை தொடுத்தணிந்தா னுலகமெலாந்
துதிக்கும் வண்ணந்
தங்குபுகழ் தேவாங்கர் திருமாபுச் சவுடப்பன்
றமிழான் மன்னே.

புளியம்பட்டி சாலி மகாரிஷி கோத்திரம் மகா-ா-ா-ஸ்ரீ
க. மாகாளிமூப்பனாரவர்கள் குமாரர்
மாடசாமி மூப்பனாரவர்க ளியற்றியது.

வண்டாடு தாளக மாதர்பலர் கூடியிடை
மின்போல வேதுவள நூபுரம தோசையிட
வங்கார மோகனவ ராளிகலி யாணியொடு—பலாக
வண்கான கீதமுட னேகுமிக ளாடுமொரு
சிங்கார வாலயமு மாசிலடி யாருளமு
மங்காது வாழ்கவுரி மாரிசிவ காமிபரை—எமதாயி
திண்டாடு தாருகன தாவிகவர் சூலியுமை
கங்காளி யாயிரவி லோசனிவ ராகிபல
தென்சோலை சூழ்புளிய மாநகரின் மேவிவள—ரபிராமி
செம்பாத தாமரையி னேயமுட னேதுபவர்
அன்பான்மெ யார்புளக மேறவிழி நீர்பெருக
செம்பாக மானதமிழ் மாலைதனை யோதினன்மெய்--பருளாளன்

கொண்டாடு மாகமபு ராணமிதி காசமுத
ஆண்டான நூல்களெனும் வாரிதியை யார்வமொடு
கும்போத யாதியென வேபருகு போறிவ—னுயர்சீலன்

கொந்தாரு மாமலர சோகமுலை நீலமணை
யைந்தேவ லோனழிவி லாதவுயர் சீருருவு
கொண்டானெ னுவுரைசெய் பேரழகன் வாய்மைதனின்—மிகுநேயன்

கண்டாடு மாலையடு சாறுமது மாபலவி
னுண்டான தூயகனி வாழைதனி லாயகனி
கன்றுவி னூறுபய மானவிலை சேரவிர—வியபோலக்

கம்பீர மானகொடி யாடை யசை மாட மிசை
யிந்தூர்க ளூரிலுறை தேவலகு மாரர்தில
கம்போல வேயிசைகொண் மாசவுட நாமமுள—பெரியோனே.

புளியம்பட்டி பொன்னுச்சாமிபுரம் தெரு, சாலி மகாரிஷி கோத்திரம்
மகா-ா-ா-ஸ்ரீ க. மாகாளிமூப்பனாரவர்கள் குமாரர்

கற்பக மூப்பனாரவர்களியற்றியது.

பொங்கமு தொழுக்குநற் றிங்கள்செல வைததடை
புரிந்திடும் பொழிலுடுத்த
புளியமா நகரினுறு ஞானவா வியின்வட
புலத்திலொளிர் சினகாத்தில்

அங்கண்வா னத்தவரு மண்டலத் தவரும்வந்
தடிபணிய வரமருளுமெம்
அன்னையா மாயிரங் கண்மாரி யம்மைக்
கலங்கல்மலர் சூடினன்றே

தங்காது புலாக் கலைந்திடுதல் கண்டினிச்
சகமழியி னுங்களைவுறுத்
தாமம் புனைந்திடுதல் சிந்தையுட் கொண்டுசெந்
தமிழ்மாலை யைப்புனைந்தான்

செங்கமல மென்குமுதம் வண்குவளை யொண்கயல்கள்
செறிதடஞ் சூழ்ந்தநல்லூர்த்
தேவாங்கர் குலதிலக சவுடப்ப நாவலன்
செகமகிழ் சிறப்பமன்றே.

புளியம்பட்டி பொன்னுச்சாமிபுரம் தெரு
சாலிமகாரிஷி கோத்திரம் மகா-ா-ா-ஸ்ரீ
க. மாகாளிமூப்பனாரவர்கள் குமாரர்

முத்துச்சாமி மூப்பனாரவர்களியற்றியது.

தங்கமலை தனைச்சிலையாய் வளைத்தவன்ற னிடப்பாகந்
தனிலன் பாகத்
தங்கமலை யெனதுமலை வகற்றுமலை மகள்விமலை
தன்றாள் போற்றூர்
தங்கமலை யொழித்தருளா ளொருமலையை யொழித்தருளுஞ்
சைவத் தெய்வந்
தங்கமலை நிகர்த்ததன முடையாட்குப் பாமாலை
சாற்றி னானல் (1)

அன்னவனு ரென்றிடிலோ தேவாங்கர் மாபிலவ
தரித்த மேலோன்
பன்னரிய கலைகளெலாங் கசடறக்கற் றுணர்ந்துநல்ல
பண்பு வாய்ந்தோன்
இன்னெழிலும் பலவளமுஞ் சிறந்தநலை நகர்வாழு
மினிய பூமான்
மன்னுபுகழ் படைத்திலகு சவுடப்ப னெனுங்கவிநா
வலவன் றானே. (2)

இவன்மொழிந்த பாவினத்தி னருமையைப்போற் கம்பன்று
னியம்பி னானே
அவன்மொழிந்தானிலையெனினுந்தமிழ்முனியென் றுலகமெலா
மரிதா கச்சொல்

பவன்மொழிந்த தேனுமுண்டோ வினியுலகி லொருவரையும்
பாரோம் பின்னை
எவன்மொழிந்தா னெனக்கேட்டாற் சிவன்மொழிந்தான் வேதமென
வியம்ப லாமே. (3)

புளியம்பட்டி சோசியம் மகா-ா-ா-ஸ்ரீ
சண்முகவேல் முதலியாரவர்கள் குமாரரும்
சொ. சண்முகசுந்தர புராணிகரவர்கள் மாணுக்கரு ளொருவருமாகிய
முத்துக்குமாரு முதலியாரவர்களியற்றியது.

விண்ணுலாம் பொழில்சூழ் நல்லையம் பதிவாழ்
விபுதநா யகிகொலு வாசி
தண்ணுலா மதுர மொழிகவு மாரி
தயாபரி மாரியென் னம்மைக்
கெண்ணுலாந் தமிழ்ப்பா மாலைகோத் தணிந்தா
னிசைக்கும்நாப் பார்த்தகண் கேட்டோர்
அண்ணல்வான் செவிகள் தனித்தனி யினிக்க
அணிசவு டப்பநா வலனே.

அருப்புக்கோட்டை தேவாங்கர் ஸ்கூல்களின் மானேஜர்
தேவாங்கர்குலம் மகா-ா-ா-ஸ்ரீ
யஸ். நாகலிங்கம் செட்டியாரவர்களியற்றியது.

சீருலவு தாரணியில் மேவும்வளம் யாவுமே
திகழுமொரு காரணத்தாற்
றிருநலூ ரென்றுஜெக மெங்கணும் புகழினொடு
செப்புநக ருக்குமேற்கில்
காருலவு சோலைவள மார்புளிய மாநகர்க்
கவின்ஞான தீர்த்த வாவிக்
கரையிலொளிர் தளியிலுறை பரைகவுரி யாயிசங்
கண்மாரி யம்மைமீது

பாருலவு மானிடர்கள் ஆவலுட ஞடொறும்
பாடியவ ளருளினுலே
பவவினை துடைத்துபல பவிசும் படைத்துலகிற்
பல்லூழி வாழும்வண்ணம்
தாருலவு தேவலன் மாபுவரு நாவலன்
தகைமைமிகு தமிழ்மழையெனத்
தன்னிகரின் மாலையா யின்னிசையொ டோதினுன்
சவுடப்ப னென்னுமுகிலே.

அருப்புக்கோட்டை தேவாங்கர்குலம் மகா-ள-ள-ஸ்ரீ

ம. பு. ச. சிவசங்காஞ்செட்டியாரவர்கள் குமாரர்

பூஹூர்சாமி செட்டியாரவர்களியற்றியவை.

கொங்குலா மலர்ப்பூங் காவுயர் புளிய
கோனக ரார்செழு ஞானந்
தங்குதண் தீர்த்த நன்கரை வாழுந்
தத்துவா தீதமெய்ப் பொருளா
யெங்குமாய்ச் சீவ சாட்சியா யிலங்கி
யெண்குண மேயசிற் பொருளாய்ப்
பொங்குமா யிரங்க ணம்மையாங் கௌரி
பொற்கழ லிணைதுணை யெனவே. (1)

பத்தியாம் வலையுட் படுத்திவிண் ணமுதம்
பனிப்புறுந் தண்டமி ழலங்கல்
நித்திய மாய்மூ வுலகமும் நிலவி
நிலமிசை யேவரு மோன
முத்தியாம் வாழ்வை யடையவே யணிந்தான்
மூதெயிற் கழனிசூழ் நல்லை
யெத்திசை களினும் புகழ்சவு டப்ப
னென்னுமோ ரின்பகா வலனே. (2)

அருப்புக்கோட்டை மகா-ா-ா-ஸ்ரீ ராமாயணப்பிரசங்க வித்வான்
ஆர். யம். யஸ் கனகசபாபதித்தேவரவர்களியற்றியது.

திருமேவு கஞ்சப் பொகுட்டிலுறை நான்முகன்
செய்மக நிகர்ப்ப வெகினஞ்
செறிதடங் களினுறுங் கமலமுங் காவியுஞ்
செவ்வல்லி முத்தீ யதா
மருமேவு பொழினறுந் தேறலா குதியாக
வண்டுமறை பாடு நல்லூர்
மாபுளிய நகர்வாவி ஞானதீர்த் தக்கரையின்
மன்னுதளி யுற்று மின்ப
வுருமேவு மோராயி ரங்கண்ணி மாரியுமை
யொண்கழற் கினிய பாவா
லுழல்பவப் பிணிதொலைத் துயர்பதம் பெறவுன்னி
யோங்குதுதி மாலை வேய்ந்தான்
கருமேவு தாணியிற் றேவலன் மாபில்வரு
காளைசவு டப்ப கவிஞன்
கனியின்மது ரசமொழுகு மினியதமி ழெனவறிஞர்
கண்டுமகிழ் வொடுபுகழ வே.

அருப்புக்கோட்டை தேவாங்கர்குலம் மகா-ா-ா-ஸ்ரீ
பூ. அ. கந்தசாமி செட்டியாரவர்களியற்றியது.

வாரார் புகழ்நல்லை மாரியம்மன் தோத்திரத்தைச்
சீரார் சவுடயவேள் செப்பினன்—ஏராரும்
கற்கண்டோ தேனோ கரும்பின் தனிரசமோ
சொற்கொண்ட பாவொண் சுவை.

அருப்புக்கோட்டை தேவாங்கர்குலம் மகா-ா-ா-ஸ்ரீ
கெ. வீ. ஆர். தருமலிங்கம் செட்டியாரவர்களியற்றியது.

தேனலர் வனச மலர்செறி ஞான
தீர்த்தமென் றடங்கரை மருவிச்
செப்புதற் கரிய பைம்பொனின் சிகாத்
திருத்தளி வந்திருந் தோங்கு

ஞானசுந் தரியா யிரங்கணாம் பிகைமேல்
நாகர்கோன் முனிவா ருவப்ப
நற்றமிழ்க் கலைக ளனைத்துநன் றாக
நண்பொடு முணர்ந்துமேன் மேலும்
மானமிக் குடைய பாவல ரெவரும்
மதுரமார் முக்கனி ரசமோ
வடித்ததீங் தேனே கண்டுசர்க் கரையோ
வாரிவந் தமுதமோ வென்னத்
தானகா னமுநன் னிதிமிகு நல்லூர்த்
தக்கணத் தெருமனு ;மாபார்
சவுடய னென்னுங் கவிவலோ னினிதாம்
தமிழ்மலர்த் தார்புனைந் தனனே.

அருப்புக்கோட்டை தெற்குத்தெரு ரிசல்டு பாடசாலைஉபாத்தியாய ரும், வாளவந்தம்மன்கோவில் அருதாருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ

வாழவந்த பண்டாரமவர்களியற்றியது.

சீர்பொருந்தும் புளியநகர் ஞான வாவித்
தீர்த்தமருங் கெழின்மாரி யம்மை மீது
ஏர்பொருந்துந் தேவாங்கர் குலத்திற் றோன்றும்
எங்கள்சவு டப்பனுய ரிசைப்பா வல்லோன்
பேர்பொருந்துந் தோத்திரப்பா மாலை யென்னும்
பிரபந்த மினிமையுட னுவந் தணிந்தான்
பார்பொருந்தும் யாவருமே வியந்து பாடிப்
பத்தியுடன் கொண்டாடும் படியாய் மன்னே.

அருப்புக்கோட்டை தெற்குத்தெரு தேவாங்கர்குலம் மகா-ா-ா-ஸ்ரீ
வ. சி. சுப்பஞ்செட்டியாரவர்கள் குமாரர்

ரெங்கசாமி செட்டியாரவர்கள் இயற்றியது.

பூமகள் போற்ற நாமகள் வாழ்த்தப் பொலிவுறு புளியமா நகரின்
தாமரை பூக்க ஞானநன் மடுவின தடங்கரைச் சினகரத் தெழுந்த
கோமள மாரி யம்மைமின் மீது கும்மிபா மாலைநன் கணிந்தான்
தேமலர்த்தொடையார்சவுடயமகிபன்தேவலன்குலசிகாமணியே.

சாற்றுக்கவிகள் முற்றிற்று.

உ

சிவமயம்.



ஸ்ரீ ஆயிரங்கண் மாரியம்மன்

தோத்திரப் பாமாலை.

விநாயகக்கடவுள் துதி.

வெண்பா.

சீரோங்கு மெய்ஞ்ஞான தீர்த்தத் தடங்கரையிற்
பேரோங்கு மாயிரங்கண் பெற்றனை தாட்—கேரோங்கும்
தாமொன்ப வின்பமுறச் சாற்றுந் தமிழ்ப்பனுவற்
கோம்பன் றுடுணையா மே. (1)

திங்கட் கொழுந்தணிந்தார் செல்வத் திருக்குமரன்
அங்கட் குறமகண்மே லார்வமுறப்—பைங்கழைவாய்
நித்திலங்க ளொண்கிரண நீடுபுனத் தேகயமாம்
அத்தனைநித் தம்பணிவோ மால். (2)

சந்த விருத்தம்.

நல்வித்தெனு மடியாருள நளினத்தட மனுகி
மல்லற்புன லுண்டாடல்செய் மதபோதக மாகிக்
கல்விக்கெழு கடலாய்மிகு கருணைக்கினி மழையாஞ்
செல்வக்கண பதிதாளிணை சிந்தித்திடு குவமால். (3)

ஏதங்கெழு பவவெங்கலி யிடரிங்கணு காமல்
போதங்கெழு மெய்தங்கிய பொருடந்தருள் பொருளே
மாதங்கமு கங்கொண்டதோர் மாதேவநல் லாரார்
தாதங்குள முதல்வாவிரு தாடந்தருள் புரிவாய். (4)

பரமசிவன்.

மோகங் கொண்டவர்க் களித்திலோம் வீடென மொழிந்து
ஆகங் கொண்டெம தம்மையோ டெழுந்தரு ளரனென்
றேகங் கொண்டுல கெங்குமாய்ச் சராசரம் நிறைந்து
போகங் கொண்டவைங் கூழ்செயும் புராதனற் பணிவாம். (5)

தெக்ஷிணாமூர்த்தி.

ஓமெனும் பிரணவப் பொருளி னுண்மையி
தாமென மவுனமோ டன்று நால்வர்க்கும்
நேமமா யுணர்த்திய நிமல நாயகன்
பூமல ரடிமுடி புனைந்து போற்றுவாம். (6)

பராசக்தி.

ஐம்பெரும் பூத வண்டமா மெனவே
யனந்தகோ டிகளமைத் தவற்றில்
தன்பெருங் கருணை நோக்கினு லகில
சராசரந் தழைக்குமா றருள்கூர்ந்
தன்பினு லியற்று மைந்தொழிற் பரையா
யரியவா டலையுகந் தருளி
முன்பனும் பரமற் கின்பமே விளைக்கும்
முதல்விதன் பதாம்புயம் பணிவாம். (7)

சுப்பிரமணியக் கடவுள்.

மானேந்துந் திருக்கரத்தார் மனம்போலுங் குணம்போலும்
வடிவம் போலும்
வானேந்தும் புகழ்போலும் வளர்கயிலைக் குன்றமுதல்
வரைகள் யாவும்

கோனேந்து மூவர்களும் கொண்டாட வன்றுடல்
 கொண்டோ னுகும்
கானேர்துக் கடம்பணிதார்ப் பன்னிருதோட் பாஞ்சுடரைக்
 கருத்துள் வைப்பாம். (8)

போருந் திசைமுகற்கும் பேசரிய பிரணவத்தின்
 பொருளைப் பெம்மான்
ஏரருந் திருச்செவிக்கே யிசைத்தருள்செவ் வேல்முருக
 னிமையோர்க் காக
வோராறு திருமுகங்கொண் டொண்டவத்தோர் தவம்சிறப்ப
 வுதயஞ் செய்த
தாராருங் குமரேசன் றாள்மலர்க்கென் னுளமலரைச்
 சாத்தி னேனே. (9)

மகாவிஷ்ணு.

தந்தமெய்த் தோழமைக் குவந்து சார்கவி
யுந்தலாற் றளர்வுறுங் குசேல னெப்பிலாக்
கந்தையி னவலினைக் கருதி வாழ்வெலாம்
முந்தரு ளாழியான் கழல்கள் முன்னுவாம். (10)

சிலேயாசன் றிருமகளாய்த் தேவர்களும் போற்றுகின்ற
வலேயாசன் றிருமகளாய் வந்துதித்தா ளுடன்பிறந்து
கலேயாசர் புகழ்ந்துரைப்பக் கருணைமழை பொழிந்தருளும்
மலேயாசப் பெருமான்றன் மலர்ப்பாதந் துதிப்பாமால். (11)

மகாலக்ஷ்மி.

முந்து வானவர்க் கரசனுந் தனதனு முதலோர்
வந்து மாதவம் புரிந்திட நிதியெலாம் வழங்கி
நந்து சேர்கரத் தையனு கமுகயந் திருக்கு
மிந்து வாணுதற் றிருமக ளிருபதம் பணிவாம். (12)

சரஸ்வதி.

சந்திரன்போ லொளிர்வாளைத் தாளவடம் புனைவாளைச்
 சகல நூலும்
மந்திரமு முடையாளை மனவாக்கி லருட்பனுவல்
 வழங்கு வாளைச்

செந்தமிழ்நா வலர்துதிப்பச் சீர்வெண் கமலமிசைச்
செழிக்கின் றாளைச்
சுந்தரமா யாழேந்திப் புத்தகங்கொள் கலாநிதியைத்
தொழுதல் செய்வாம். (13)

வாழவந்தம்மை.

ஆழ மாம்பெருங் கேணியு மகன்புனை மாமுஞ்
சூழ வோங்கிய மதில்களுந் துலங்குமா லயத்தில்
ஏழ மைந்தபே ருலகுளோ ரிறைஞ்சிட வருள்கூர்
வாழ வந்தம்மை பூங்கழல் வணங்குதல் புரிவாம். (14)

மாகாளியம்மை.

தென்னைமாங் கனிமாமுங் கமுகும் வாசஞ்
செழித்திடுங்கொய் யாவுடனு மலக மோங்கி
நன்னயமாங் கேணிகளுஞ் சூழ்ந்து வைகும்
ஞானவான் புனற்றீர்த்த மருங்கு மன்னு
மின்னையே நிகர்மாரி யம்மன் மீது
மேதகுசெந் தமிழ்மொழிப்பா விளம்பு மாறு
அன்னைமா காளியம்மே கருணை யோங்கி
யடியேனுக் கினியமொழி யருள்செய் வாயே. (15)

சவுடாம்பிகை.

அருள்சுரக்குந் தயாநிதியா யபயமுடன் வாதமுந்தர்
தருள்வா டன்னை
இருள்சுரக்கும் பூங்குழன்மே லரவியென மணிமவுலி
யிலங்கு வாளைத்
தெருள்சுரக்கும் பழவடியார் சிந்தனைநோய் தவிர்ப்பவளைத்
திகழ்மெஞ் ஞானப்
பொருள்சுரக்குந் தவநிலையைச் சத்திசவு டாம்பிகையைப்
போற்றி செய்வாம். (16)

சமயாசாரியர்.

திருநாவ லூரில்வரும் செல்வரையும் சீர்காழித்
    தலத்து வேத
வுருவாகி யுதித்தவொரு முதல்வரையும் திருநாவுக்
    கரசென் றேதும்
ஒருவாத பேரன்புக் கொருவரையு முண்மையுப
    தேசம் பெற்று
மருவாருங் குருந்தடிகொள் வாதவூ ரடிகளையும்
    வணக்கஞ் செய்வாம். (17)

கருப்பசாமி.

உருக்க மாயொருப் பலிமுத லுவந்தனர் கொடுத்துப்
பெருக்க மாகிய பொங்கலிட் டிறைஞ்சிடும் பெருமான்
வருக்க மாவர சோங்குநன் னீழலின் வயங்கும்
கருக்கு மெய்யரி வாட்படை யான்கழ றுதிப்பாம். (18)

அவையடக்கம்.

கல்வி ஞானந் தெரிந்த கருணையார்
செல்வம் யாவும் நிரம்பிய சீர்த்தியார்
சொல்லின் வாய்மை துலங்கிய தூயவர்
மல்கு சாலி முனிமா பேர்சொல. (19)

ஆயி ரங்கண் ணமைந்திடு மன்னைமேற்
சேய னேனுளத் தன்பு சிறந்திடத்
தூய செந்தமிழ்ப் பாவுரை சொற்றனன்
நேய மாய்ப்பெரி யோர்க ணினைப்பவே. (20)

வேறு.

செந்தமிழ் நாவலர் முன்சிறி யேனும்
பைந்தமிழ் மாலை பகர்ந்தன னாகி
யந்தமி லாத வரும்பொரு ளுக்கே
சிந்தை மகிழ்ந்தருள் செய்கநல் லோரே. (21)

வேறு.

பாலை யுண்பவர் நீரையும் பருகுவார் போல
மேலை யோர்பழம் பாடலை விரும்புவோர் சிறிதும்
நாலை யாய்ந்திலே னம்மைதன் புகழ்நுவன் றதனைக்
காலை மாலையெக் காலமுந் துதிப்பது கடனே. (22)

தீர்த்தமகிமை.

கண்டவர்தம் முளங்களிப்பக் கரைதொறும்பூங் காவுடுத்துக்
கமல மாதி
யெண்டிசையுங் கமழ்மலர்க ளெங்குமலர்ந் திறல்பெருக
வெழில்சேர் ஞானங்
கொண்டதடம் புனல்படிந்து குவலயத்தோர் பவவினையாங்
குறைக ளைந்து
அண்டரெலாம் வியந்துரைப்ப வரியபெருந் தீர்த்தமிதென்
றமைந்த தம்மா. (23)

அம்மன்மகிமை.

செஞ்சுடர்போ லாயிரங்கண் ணுடையா டன்னைத்
தினந்தினமுந் தெரிசித்து வணங்கி னோர்கள்
கஞ்சமலர்த் திருமகடன் னோக்குண் டாகிக்
கலைஞானம் யாவையுங்கற் றுணர்ந்தோ ராகிச்
சஞ்சலமார் பிணியின்றி வாணு ளோங்கித்
தாணிமிசை யெந்நாளுந் தகைமை யெய்தி
மிஞ்சுபுகழ் மைந்தருடன் வியப்புண் டாகி
மேன்மைமிகும் பொருளனைத்தும் விளங்க வாழ்வார். ()

தலமகிமை.

ஆழியொன் றுருட்டி யுலகெலாஞ் செங்கோ
லாணையின் படியா சியற்றும்
பாழியந் தடந்தோள் வழுதிக ளியற்றும்
பதிகளில் நன்மையே மிகுப்ப

வாழிமா முனிவர் விண்ணுளோர் பரவ
வையமே னல்லையம் பதியாய்ப்
பூழியன் றிருமா நகரமென் றளவில்
புண்ணியம் நிறைந்ததித் தலமே. (25)

வேறு.

அங்காளி லம்பிகையா ரனந்தமாந் திருப்பதிக
ளாய்ந்து நோக்கிப்
பொன்னாரும் புகழ்மாந்தர் பொருந்துநக ரீதுவெனவுங்
கருணை பூண்டு
நன்னாமம் வாய்ந்தனவாய் மெய்யன்பர் நண்ணியகத்
தலமீ தென்றும்
எந்நாளு மிப்பதியே யிருப்பிடமா யுகந்தனளெம்
மம்மை யம்மா. (26)

கார்காட்டுங் குழன்மடவார் வார்காட்டுங் கனதனத்தைக்
கலந்த மார்பர்
போர்காட்டும் பகைஞரெலாம் புறங்காட்டும் படியடர்க்கும்
புகழ்த்திண் டோளார்
பார்காட்டும் பூழியர்தம் பதிகாட்டும் நிதிகாட்டும்
படிசேர் வாய்ந்த
பேர்காட்டும் புளியநகர்ப் பெயர்காட்டுந் திருப்பதியிற்
பெருமை வாய்ந்தும். (27)

பூவிரிக்கும் பொழிலுடுத்தும் புகழ்விரிக்கும் புயன்மடுத்தும்
புனித ஞானப்
பாவிரிக்கும் தகவினராய்ப் பன்னூலு நன்னூலும்
பாவி வாய்ந்த
நாவிரிக்குந் தமிழ்க்கவிஞர் நண்ணியவிந் நகரதனின்
நலமே மிக்க
காவிரிக்கு மேலாகிக் கவின்விரிக்கும் புனல்வாவிக்
கரையின் பாங்கர். (28)

பண்ணார்ந்த மொழிமடவார் பாலார்ந்த மதிமுகத்திற்
பாவி நீண்ட
கண்ணார்ந்த கயல்நோக்கிக் கதியார்ந்த மீனினங்கள்
கலங்கி யோடும்
விண்ணார்ந்த முகத்தெழிலால் மேலார்ந்த செழுங்கமல
மெலிந்து வாடும்
தண்ணார்ந்த நெடுந்துறைசூழ் தடமார்ந்தங் கெந்நாளுந்
தகமை யார்ந்து. (29)

நூல் செய்ததற்குக் காரணம்.

வேறு.

நலங்கண் மேவும் புராண கதைகளை
நாடொ றுஞ்செயக் கண்டு மகிழ்பவர்
இலங்கு பூணனூல் மார்பொடு பூசையும்
ஏய்ந்த கைச்செப மாலை மணியுளார்
கலங்கு றுத பெருந்தன வந்தராய்க்
கனகஞ் சேருத்தி ராக்கத்தின் மாலைகொள்
விலங்க லும்புகழ் வென்றியு மிக்கவர்
மன்னு சாலி முனிமா போர்களே. (30)

ஆய்ந்த பைந்தமிழ் தேர்ந்தமெய் யன்பர்கள்
அறங்கள் யாவும் புரிந்திடு வோர்தொழும்
வேய்ந்த பூங்குழல் வேணி மகாமுடி
வென்றி சேர்திரி சூலி கபாலியாம்
வாய்ந்த பேரருள் நாவலர் நாடொறும்
வழுத்து கின்றபா மாலை வனைந்திடும்
நாந்த கங்கரங் கொண்டரு ளாரணி
நன்மை யாவர்க்குந் தந்தருள் செய்பவள். (31)

வேறு.

திருந்தியபே ரிசைமிகுமெஞ் ஞான தீர்த்தஞ்
சேர்ந்துயர்வாம் புரியநகர்ச் செல்வப் பூமான்

வருந்தியபேர் தமைக்காக்குந் தயாள சீலன்
மனுமுறைதேர் முத்தழகு மகிப னீன்ற
பொருந்தியநாட் டாண்மைபெறு மிராம சாமிப்
புனிதனுவந் தனுதினமும் புகழ்ந்து போற்ற
அருந்திறலு நன்மையெலாங் கொடுக்குஞ் சீரா
ராயிரங்கண் ணமைந்திடுமென் னன்னை மீது. (32)

எந்நாளுந் தனபதியாம் முத்துச் சாமி
யென்பவரும் எங்கணும்பே ரிசையே யோங்கிப்
பொன்னுள்பொன் னம்பலபூ பதியென் றோதும்
புகழ்முதலா ளிகளிருவர் போற்றி செய்யப்
பன்னாளும் நன்மையெலாங் கொடுப்பா ளாகிப்
பாமனுளந் தனிலுயிரோ வியமாய் நின்றும்
தொன்னாளும் ஞானமிகும் புனல்சேர் வாவித்
துறைமருங்கு வீற்றிருந்து துலங்குந் தாய்மேல். (33)

வேறு.

தங்குபுகழ் முனிசிபு சங்காலிங் கேந்திரன்றன்
றனய னாகுந்
துங்கமிகு மிராமலிங்க சுகுண னுடன் சோதிடத்தின்
றுறையா ராய்ந்த
எங்கள்வெங்க டாசலமா மினியவனும் காசிலிங்கக்
குரிசி லீன்ற
பொங்குமெழிற் குருசாமிப் புண்ணியனும் போற்றவருள்
புகட்டுந் தாய்மேல். (34)

தனம்பொருந்துஞ் சாலிமகா முனிவார்தன் திருமரபோர்
தகமை மேவு
மினம்பொருந்தும் பேரன்ப ரிசைத்திடலால் யானுமதற்
கிசைந்தே னாகி

அனம்பொருந்துஞ் சரோருகமா மருள்ஞான தீர்த்தமருங்
கணைந்து மென்றன்
மனம்பொருந்து மாரியம்மன் மகிமைமிகுந் தோத்திரத்தை
வழங்கி னேனே. (35)

சேல்வீசுஞ் சூழ்பழனஞ் செஞ்சாலிக் கதிர்வீசுஞ்
செழும்பூஞ் சோலைக்
கால்வீசும் பழுத்தகொழுங் கனிவீசு மதுமழையுங்
கலந்து வீசும்
பால்வீசுந் தரங்கமெல்லாம் பன்மணிகள் வீசுபுனற்
றடத்தின் பாங்கர்
வேல்வீசுந் தடநெடுங்கண் மாரியம்மன் தோத்திரம்யான்
விளம்பு வேனே. (36)

குயில்கூவு மின்னிசையுங் கொஞ்சுபசுங் கிளிபேசுங்
குலத்தி னார்ப்பும்
மயிலாடும் பேரழகும் வண்டுகளுண் டேழிசையும்
வழங்கு மார்ப்பும்
ஒயிலாரும் மடக்தையர்நூ புரத்தொலியு மியங்களொடு
மொலிப்பு நீங்கா
வெயில்காணுப் பசும்பொழில்வாழ் மாரியம்மை தோத்திரம்யான்
விளம்பு வேனே. (37)

வேறு.

நீங்காத பேரன்பு நிறைந்தவர்தம் முளம்போலும்
தேங்கார்தண் புனல்வாவி செழித்திலங்குஞ் செயல்போலும்
ஆங்கால மெய்வருந்தார்க் காக்கமமைந் தனபோலும்
பாங்கார்பொற் சினகரத்தோ யம்மைபுகழ்ப் பாவுரைப்பாம். ()

இந்நூல் செய்த வருடம்.

எண்ணுலவுஞ் சகாப்தமதோ ராயிரத்தெண் ணூற்றுடனீ
ரிருபான் மூன்றில்
விண்ணுலவுஞ் சிகரமுடன் விளங்கியபொற் சினகரத்தின்
மேவு மெங்கள்

பண்ணுலவும புளியநகர் மாரியம்மன் தோத்திரத்தைப்
பகர்ந்தேன் யானும்
தண்ணுலவுந் தேவாங்கர் குலத்துதித்த சவுடப்பன்
றமிழான் மன்னே. (39)



நூல்.

மங்கலந் திகழெழின் மாரி யம்மையை
அங்கணு யிரங்களு மமைந்த அன்னையைப்
பொங்கெழின் மிகுந்திடும் புனித ரூபியை
யிங்கெமச் கினியசொல் லிசைக்க வேண்டுவாம். (1)

வேறு.

சீரி யைந்த சிவாகம நூல்களும்
பாரி யைந்த மனுநெறிப் பான்மையும்
நேரி யைந்தமெய்-யன்பர் நிதந்தொழும்
மாரி யம்மை மகிமை வழக்குவாம். (2)

காரி னங்கள் பொழிந்து கவின்பெறப்
பாரி லெங்கணும் பல்லுயிர் மல்கவே
பேரி யைந்தநல் லூர்வளர் பேரெழில்
மாரி யம்மை வரந்தருந் தெய்வமே. (3)

வாரி சூழுல கந்தனின் மாந்தர்கள்
ஏரி லங்க வெழுமுளைப் பாலிகொண்
டாரி யம்பெறு மன்பர் பணிந்திடும்
மாரி யம்மை மலர்ப்பதந் தஞ்சமே. (4)

போரி யைந்த விசயன் பொருட்டினல்
தேரி யைந்து செலுத்திடுஞ் செல்வர்க்குத்
தாரி யைந்திடுந் தங்கையெ னுவரும்
மாரி யம்மையை நாளும் வணங்குவாம். (5)

வேறு.

சீதமே நிறைந்த முகமதி செழிக்குஞ்
செல்வமே சின்மயப் பொருளே
போதமே நிறைந்த புண்ணிய வடிவே
புராந்தகர்க் குகந்தபூங் கொடியே
நாதவே தாந்த முடிவிலே நடஞ்செய்
நாயக ராடலுக் கமைய
மோதுகைத் தாள மிடும்பரா பரியே
முழுதுமெம் பவந்தவிர்த் தருளே. (6)

அருள்பழுத் தொழுகுங் கொழுங்கனிச் சுவையே
யன்பினி னிறைந்தவா ரமுதே
தெருள்பழுத் தொழுகுஞ் சிவானந்தத் தேனே
தீங்கரும் பினியசெஞ் சுவையே
மருள்பழுத் தொழுகுங் கயவரா னவர்க்கும்
மயக்கெலாந் தவிர்த்தருள் ஞானப்
பொருள்பழுத் தொழுகுந் தவநிலைப் பயனும்
புசாதனி முக்கணு யகியே. (7)

பண்ணுளார்க் கிரங்கும் பாமனு ருளத்திற்
பழுத்தபூங் கற்பகக் கனியே
யெண்ணுளார்க் கிரங்கு மேகநா யகியே
யெளியனேற் கருளுநா ளுளதோ
விண்ணுளார் துதிக்கும் வித்தக முதலே
வியப்புற விளங்குமெஞ் ஞானக்
கண்ணுளார்க் கருளுங் கருணையங் கடலே
கண்ணினுள் விளங்குமா மணியே. (8)

கணப்பொழு தேனு மிடைவிடா தனையே
கண்டுகண் டிறைஞ்சுமா றருள்வாய்
பணப்பையா டரவம் புனைந்தவெம் பெருமான்
பார்த்துளங் களித்திடுங் குயிலே
தணப்பரும் புகழ்சேர் ஞானவான் புனலார்
தண்டுறை மருங்குவீற் றிருக்கும்
மணப்பசுந் தொடையும் வண்டமிழ்த் தொடையும்
வனைந்தமா மாகதக் கொழுந்தே. (9)

காரொடு மியற்கை மணங்கமழ் கூந்தற்
காடுதோ யுவாமதி முகத்தாற்
பாரொடு விண்ணும் பாதலந் தனிலும்
பாந்தபே ரிருளெலாந் துரத்திச்
சீரொடு விளங்குந் தெய்வமா மணியே
சிறியனேற் குய்யுநா ளுளதோ
பேரொடு விளங்குந் புளியமா நகரிற்
பெரும்புகழ் நிறைந்தபெண் ணரசே. (10)

கருங்கலோ விரும்போ வயிரமா மரமோ
காண்கிலே னுருக்கமென் பதையான்
ஒருங்குநின் றிருத்தாட் குண்மையாய் வணங்க
வுணர்விலே னுய்யுநா ளுளதோ

மருங்கெலாம் பொழிலும் நங்கன வனமும்
வாவியும் வயங்குநீர் வளஞ்சேர்
பெருங்கவி னிறைந்த நல்லையம் பதிவாழ்
பிரணவக் தழைத்தபே ரருளே. (11)

நீரினிற் குமிழி போலுமின் போலும்
நிலையிலாக் காயமா தலினாற்
சீரினில் வயங்கும் நின்பதஞ் சதமாய்ச்
சிந்தனை செய்யுமா றருள்வாய்
தாரின்வண் டினங்கண் முழங்குமே ழிசைநின்
றுண்மலர் துதித்திடன் மானும்
பாரினி லுயர்ந்த நல்லையம் பதிவாழ்
பங்கயத் தடங்கட லமுதே. (12)

ஆகொடும் பாவி யுலகினான் றானே
அறிவிலாப் பேதையா யிடினும்
பாகொடுந் தெருட்டுஞ் செஞ்சொலா யெளியேன்
பவவினை தவிர்த்தருள் புரிவாய்
யோகொடுஞ் சனகா தியர்க்குணர்த் தியவோ
ருருவிலார்க் குருவிலாப் பொருளே
யேகொடும் புவன சராசரம் படைத்து
மெங்குமாய் நிறைந்தபூ ரணியே. (13)

அடுத்திடை விடாம லன்புதந் தருளு
மணணையே யனாதாட் சகியே
தொடுத்தசெஞ் சொல்லா னறுமணங் கமழத்
துலங்குபா மாலைவேய்ந் தருளி
யுடுத்தவெம் புலித்தோற் காகபா லியருக்
குயர்ந்தவாழ் வொடுநிதி யனைத்தும்
கொடுத்தபே ரரசே யெனக்கும்வான் கருணைக்
கொண்டலாய் மழைபொழிந் தருளே. (14)

தக்கன்மா மகளா யிமயமீன் றருளுந்
தவத்தினுக் குகந்தபெண் கொடியாய்
மிக்கசெந் தழலார் வேள்வியி னுதித்த
மேதகும் பூழியன் மகளாய்
மைக்கருங் கடல்சேர் வலைஞர்கோன் மகளாய்
வந்துதித் திடுமுனை வழுத்தச்
செக்கர்மா மணிகா லனந்தனுந் திகைக்கிற்
சிறியனேன் புகழ்ந்திடத் தாமோ. (15)

உன்னையே வணங்கி நல்வரம் பெறுமா
றுரைத்துமென் மனங்கசி யாத
தென்னையோ வெளியே னிறைஞ்சிடா விடிவிவ்
விடர்ப்பவங் கடப்பதற் காமோ
அன்னையே யிறைஞ்சு மறிவிலா விடினும்
அடியேனென் பிழையெலாம பொறுத்துத்
தன்னையே யனைய தாயினு மினியாய்
தமியனைக் காப்பதுன் கடனே. (16)

மனவெளி கடந்த மாசிலா மணியே
வானுளோர் முனிவர்மா மறைகள்
இனமுங்கா ணறியா வேகநா யகியே
ரின்பமே நிறைந்தவா ரிதியே
கனவிலு முனைநான் தரிசனம் புரிந்து
கவின்பெறும் பொன்னடி வணங்க
அனவர தமுநீ கருணைதந் தருள்வாய்
அன்பருக் கருள்செய்மா நிதியே. (17)

என்மனத் தடங்கா வானந்தப் பெருக்கே
யிருளெலாந் துரத்தும்வான் மதியே
நன்மனத் துகந்த ஞானவான் கதிரே
நாடொறு முனைத்துதி யாத

கன்மனத் தவர்க்குங் கருணையே சுரக்குங்
கண்கண்மா மணியெனக் கருள்வாய்
மின்மணி யிமைக்கும் வண்டுளாய் மௌலி
வித்தகர்க் கிளையபூங் குயிலே. (18)

யானுறுங் கவலை யனைத்தும்நீ யறிந்தும்
அடியனைக் காக்கவந் திலையே
கானுறுங் கடப்பந் தாரினான் றனக்கும்
கருதுமைங் காமுதற் பொருட்கும்
பானறுந் தமிழ்சேர் தோணிமா புரத்துப்
பண்ணவன் றனக்குமோ ரனையே
வானுறுந் துயர்தீர்த் திக்கணந் தனிலே
வந்துநின் கருணைதந் தருளே. (19)

எண்ணரும் புவனம் யாவுமாய் நிறைந்து
மெள்ளினுள் ளெண்ணெய்போ லிருந்தும்
வண்ணமா மலரின் மணமுமாய்க் காயாய்
மரங்களின் கனிகளு மாகிக்
கண்ணினுண் மணியாய்க் கவின்கொளான் பாலிற்
கலந்துறை வெண்ணெயு மாகி
நண்ணியெவ் வுயிர்க்கு முயிரென விளங்கும்
நற்றவந் தழைத்தமெய்க் கொழுந்தே. (20)

எங்கணாற் றவத்தா லிங்கெழுந் தருளு
மிமயமீன் றருள்பொலங் கொடியே
திங்கள்போல் நிறைந்து திகழ்மனோன் மணியே
சிறுவனைக் காக்கவந் தருள்வாய்
கொங்கலை கூந்த லறுபத முழக்கம்
கோயிலின் னியங்களோ டார்க்கும்
பைங்கழை யாரம் பசும்பொன்மா மணிப்பூண்
பாங்கொடு புனைந்தபார்ப் பதியே. (21)

திருந்திய வருந்தே ரல்குலா ரிடத்திற்
சிந்தையே பந்தமா னவர்க்குப்
பொருந்திய சுவர்க்கந் தந்திலோ மெனவே
புகன்றுபின் னன்னிலை யுறுமல்
மருந்தினு மினியா யுன்னொடுங் கலந்து
மகிழ்பவர்க் குகந்தபே ராசே
வருந்திய வெமது பெருந்துய ரகற்றி
மகிழ்ந்துநல் வரங்கொடுத் தருளே. (22)

சோமனைக் குறைத்தும் காமனை யெரித்தும்
தும்பியி னதழினை யுரித்தும்
பூமனோர் சிரத்தைப் போக்கியு மவுணர்
புரங்களை நீறெழப் புரிந்தும்
எமனை யுதைத்து மெங்குமாய் நிறைந்து
மிலங்கிய கருணையே சுரந்த
மாமனு மதுரைத் தலைவருக் குகந்த
மனோன்மணி யுனதடைக் கலமே. (23)

நினைந்திடாப் பிழையும் பணிந்திடாப் பிழையும்
நேயமா மன்பரா னவர்க்குக்
கனிந்தபே ரன்போ டமுதிடாப் பிழையும்
கற்றவர்ச் சேர்ந்திடாப் பிழையும்
நனைந்ததே மலரால் மாலையே தொடுத்து
நாடொறு மணிந்திடாப் பிழையும்
புனைந்தவர் சடையா யனந்தமாம் பிழைகள்
புரிந்திருக் கினும்பொறுத் தருளே. (24)

காலமோர் மூன்றும் கணித்தமா தவர்கள்
கருதிய வகந்தையே மிகுத்துச்
சீலமே தவிர்ந்து தெளிந்திலா திருப்ப
சிறந்தபிச் சாடன வடிவாம்

கோலமா யவர்தம் மடந்தையர் நிறையைக்
கொள்ளைகொண் டருள்பரம் பொருளாம்
பாலலோ சனனும் பகர்ந்திடும் புகழ்சேர்
பரமகிர் பாநிதி முதலே. (25)

காண்பரு முயர்வான் கற்பகக் கனியே
கமலமீ துகந்தவோ திமமே
பூண்பரும் பதக்கத் தொடுநனி விளங்கும்
பொன்மணி யாரமே புகழ்சேர்
சேண்பரம் பொருளே சிவமணங் கமழும்
செல்வமே சிறியனேற் கருள்வாய்
மாண்புறும் நலஞ்சேர் நல்லையம் பதிவாழ்
மரகத மாமணிக் கொழுந்தே. (26)

மல்லலங் தடந்தோள் நமனிடர் தவிர்த்தும்
வறுமையும் பிறவியுந் தவிர்த்தும்
நல்லவர்க் குதவுந் தெய்வமே யுனையே
நம்பினேற் கருள்புரிந் திடுவாய்
இல்லறந் துறந்தும் போதமே நிறைந்தும்
எண்ணினுட் டவங்களே புரிந்தும்
ஒல்லையி னுணரா வுயர்ந்தவான் பதமே
யொப்பிலா வற்புதப் பொருளே. (27)

புளியமா நகரிற் செல்வமே பொருந்தப்
பொருந்திய புயங்கமா மணியே
அளிமிகுந் தொழும்ப ரன்பினே டிறைஞ்ச
வன்னைநீ கருணையே சுரந்தவ்
வெளியவர் தமக்கு மன்புளார் தமக்கு
மின்பமா மழைபொழிக் தருளும்
நளிர்புனல் வளஞ்சேர் நல்லையம் பதிவாழ்
நாதவே தாந்தமெய்ச் சுடரே. (28)

வேறு.

கனிந்துகனிந் தினியரசம் நிறைந்து வாசங்
கமழ்ந்திடுமுக் கனியமுதே கருணை வாழ்வே
வனைந்துவனைந் தரியபழம் பாடற் செல்வர்
மாருத பேரன்போ டலங்கல் சூட்டப்
புனைந்துபுனைந் தவர்க்கருணன் னிதியத் தோடு
புலப்பகையை வெல்லுமருந் தளிக்கு மம்மே
யினைந்தினைந்துன் பதந்தொழுவேன் துயரந் தன்னை
யிளங்கதிர்முன் னிமமிரிந்த தெனச்செய் வாயே. (29)

மண்டலமாங் கதிர்மதியாய் விண்ணாய் மண்ணாய்
வயங்கியதோ ரனலனிலத் துடனப் பாகி
விண்டலமாம் வேதாந்த முடியில் நின்றும்
விளங்கியதோ ருபநிடதப் பொருளு மாகிக்
கண்டலமா யவயவங்கள் யாவு மாகிக்
கருத்தொடுணர் வுயிராகிக் கலந்து வைகும்
எண்டலமே யொருங்குணர்வோ டுனையான் கண்டிங்
கெந்நாளு மிறைஞ்சும்வா மருள்செய் வாயே. (30)

வேறு.

ஆதி யந்தமுங் கடந்துல கனைத்துமாய் நிறைந்த
சோதி யாய்த்தொழும் நித்யகல் யாணசுந் தரியே
ஓது மெய்ச்சிவ பத்தியு முண்மையாம் பொருளும்
பாத பங்கயம் பணிந்திடும் பாலனுக் கருள்வாய். (31)

பெருகும் ஞானவான் கடலெனும் பிரணவப் பொருளே
ஒருபெ ருங்குணக் குன்றமே யொப்பிலாப் பதமே
திருவெ லாம்நிறைந் தொளிர்தரும் செம்மணிச் சுடரே
பொருவி லாமனங் கொடுத்துனைப் போற்றுமா றருளே. (32)

உருகு மன்பினே டிறைஞ்சுவோர்க் குயர்தபே ரறமும்
பெரு நிதிக்குவை முதலவாம் பெரும்பய னனைத்தும்
தருஞ்சி வானந்த வெள்ளமே தமியனேற் கிரங்கி
அருமை யாகும்நின் கருணைமா மழைபொழிந் தருளே. (33)

நம்பி னேனுனை யன்னையே நாடொறு மெளியேன்
வெம்பி வெந்துயர்க் கடலிடை வீழ்ந்திடா வண்ணம்
செம்பொ னேய்ந்திடுந் திருவடித் தாமரை யருள்வாய்
உம்பர் நாயக னுவலுக் குகந்தபூங் கிளியே. (34)

அந்த மாதியுங் கடந்தபே ரானந்த மயமே
சிந்தை யன்புளார்க் குள்ளமாம் கமலமேற் செழிக்கும்
கந்த மாவனப் பேடையே யருள்செய்கண் ணுதலார்க்
கெந்த நேரமும் புளகெழ விளங்குமென் னகையாய். (35)

வேத புங்கவன் வேட்கையா யருகுறுந் தோறும்
போதி நீபெரும் பித்தனென் றுரைத்திடும் புகழோய்
பாத பங்கயம் பணிந்திடும் பாலனேன் பனுவல்
மேத குந்தொடை வேய்ந்தருள் புரியவேண் டினனே. (36)

கதிக்கு வேண்டினோர் பிறவியாங் கடல்கடந் திடவே
யுதிக்குஞ் சூரிய னுமென விருண்மல மோட்டி
மதிக்கும் ஞானமும் பதங்களும் வழங்கிடு மனையே
துதிக்கு மென்பவத் தொடக்கறுத் தருள்வதுன் கடனே. (37)

துன்ப சாகரத் தாழ்ந்தபே ரன்பரைத் துயர்தீர்த்
தின்ப சாகரத் தாடுமா றிரங்கியே யருள்வாய்
வம்பு லாமலர்ச் சேவடி வணங்குமென் றனக்கும்
நின்ப தாம்புயங் கொடுத்தரு ளின்மலக் கொழுந்தே. (38)

அனந்த மாம்பெருங் கல்வியும் ஞானமு மறிந்தும்
நினைந்தி டாதுனைத் தொழுதிடா தன்புநேர்ந் திலாய்ச்
சினந்த வாதவைம் புலன்தெறத் தேர்ந்திலார்க் கனுகாய்
கனிந்த வானந்த வெள்ளமாங் கருணைநா யகியே. (39)

தேர்ந்து தேர்ந்துனைத் தினந்தினந் தெரிசனஞ் செயவே
யோர்ந்து மோர்ந்துமென் னுளமுரு காததென் பவமோ
சேர்ந்த சேர்ந்தவைம் புலப்பகை யாவையுஞ் சிதைத்தே
யார்ந்த சேவடி நீழல்தந் தருளணங் காசே. (40)

அம்மை யேயுனைப் பணிந்திலே னன்பிலே னெளியேன்
வெம்மை யாங்கொடும் பிணிகளும் வறுமையும் விளைப்பச்
செம்மை யொன்றிலேன் செய்திடும் பிழையெலாம் பொறுத்து
நன்மை யாவுமெய்ச் சுகங்களும் நல்கவேண் டினனே. (41)

வேறு.

கங்கை யோயமு னாநதி யோபெருங் கவின்சேர்
துங்க பத்திரி யோவெனத் தோன்றிநற் கதிதந்
திங்கு வைகுறும் ஞானவான் புனற்கரை யிருந்தாய்
எங்கண் மாதவப் பயனென வியம்பயா வருமே. (42)

எப்பெ ருந்திரு வளங்களு மடந்தைய ரெழிலும்
ஒப்ப ரும்புகழ்ச் செல்வரும் ஓங்கிய வறமும்
தப்பி லாமனு நீதியும் தகவுமே நிறைந்த
திப்பெ ரும்பதி யென்னவே யிங்குகந் தனையோ. (43)

வாச மார்மருக் கொழுந்தணிந் திலங்கிய மவுலி
பேசு மாயிரங் கோடியாங் கதிரொனப் பிறங்கும்
ஈச னாரிட மெழுந்தரு ளிமயமா மயிலே
மாசி லன்பருக் கெளியவ ளாய்வரு மருந்தே. (44)

சத்தி யாகிய நிலையெலாந் தங்கிய வடிவே
பத்தி யாகிய நிலைபெறும் படிவச மருள்வாய்
சித்தி யாகிய நிலையெலாம் செழித்திடுந் திருவே
முத்தி யாகிய நிலையெலாங் கொடுத்திடு முதலே. (45)

தொண்டர் யாவருந் தொழுதிடுந் துரைமகள் வருக
எண்டி சாமுகத் திறைவரை வென்றவள் வருக
மண்டு கோமள மாகதக் கொழுங்கதிர் வருக
முண்ட காசனன் முதலினோர் தொழுபவள் வருக. (46)

தஞ்ச மென்பவர்க் கிரங்கிடுந் தயாபரி வருக
அஞ்ச லஞ்சலென் றருள்புரிந் திடுபவள் வருக
பஞ்ச பாணனைப் பயந்தவன் றங்கையே வருக
நெஞ்சி லன்புளார்க் கிரங்கிடும் நிமலையே வருக. (47)

சீர னந்தமாய்த் திகழ்தருந் தெய்வமா மணியே
பேர னந்தமாய் விளங்கிய பேரொளிப் பிழம்பே
கார னந்தமாய்ப் பொழிந்திடுங் கருணைவா ரிதியே
ஏர னந்தமாய் விளங்கிடு மேகநா யகியே. (48)

அங்கண் மாநில மடங்கலு முனைத்தொழு திடவே
சங்க மாநிதி முதலிய நிதியெலாந் தருவாய்
எங்கு மாய்நிறைந் திகபர போகங்க ளினிதாய்த்
துங்க மாகிய பதமெலாந் தருந்துரை மகளே. (49)

மங்க லந்திகழ் மதுரையம் பதிதனில் வளரும்
அங்க யற்கண மமுதமே யானந்தக் கொடியே
யிங்கு நீகயி லாயமென் றெழுந்தரு ளினையோ
தங்கி வாழ்வதின் னகர்புரிந திடுந்தவப் பயனோ. (50)

அங்கி யாகிய மலைவள ரருணையென் றமைந்தோ
எங்கு மாம்பர வெளிசிதம் பரமென விசைந்தோ
கங்கை மாநதி வருந்திருக் காசியென் றுணர்ந்தோ
யிங்கு வைகுவ தெங்கண்மா தவப்பயன் றானோ. (51)

ஆலந் தாங்கிய மிடற்றின ராடல்கொண் டிடவே
சூலந் தாங்கிய வீரபத் திரையெனத் துவன்றிக்
கூலந் தாங்கவென் றவரொடு மாடல்கொண் டனையே
காலந் தாங்கிய வூழிதோ றோங்குகற் பகமே. (52)

அண்ட கோடிக ளடுக்கடுக் காயமைத் திடவும்
கொண்ட நாயகர் பித்தாய்க் குதித்தழித் திடவும்
கண்டு நீமனக் கவலையும் கடுஞ்சின முறாது
பண்டு போலவுண் டாக்கிடும் பார்ப்பதி யுமையே. (53)

தொண்ட னுனன் தடிமையென் றனுதினந் தொழுதல்
கண்டும் நீமனங் கருணைசெய் யாததென் கலியோ
அண்டி னேனுன தடைக்கலங் காத்தருள் புரிவாய்
கொண்ட றோய்பொழில் நல்லைவாழ் குலமடப் பிடியே. (54)

செந்தி லம்பதி முருகவேள் திருப்புக ழொடுமக்
கந்த வேள்மிசைக் காவடிச் சிந்துக ளொருபால்
முந்து மாமணி யொலியொடு மியங்களு மொருபால்
வந்தி றைஞ்சுவோர் முழக்கமாய் வயங்குமா லயமே. (55)

வெருளி யாம்பெருங் கானகம் வேறக் களைந்து
அகலு மாமனத் தகந்தையாங் கிழங்ககழ்ந் தெடுத்துத்
தகவு மாபெருந் தவநிலை தேர்ந்தவர் தமக்குப்
புகலு மீறிலாப் பதந்தரும் புனிதவான் சுடரே. (56)

அனந்த மாகிய யுகந்தொறு மமைந்தில வணடியார்
நினைந்த வாறெலாம் நல்வரங் கொடுத்திடும் நிமலாய்
கனிந்த பேரருட் கனிதருங் கற்பக தருவே
வனைந்த வார்சடைக் கண்ணுதற் கின்பமா மணியே. (57)

எத்த லத்தினு மிருந்திடும் பதியெலா மியம்பின்
அத்த லங்களின் நல்லையம் பதிக்கிணை யலவென்
றுத்த மந்தரும் பதியிது வாமென வுகந்து
சித்தம் வைத்தடி யார்க்கருள் செய்யுஞ்சிவக் கொழுந்தே. (58)

வேறு.

மதுமா லைபுனைத் தமகேஸ் வரியே
சதமா மகனுந் தனிவா னவரும்
பதமா மலர்வந் தனிந் திடவே
நிதியா வும்வழங் கிடுநன் னிதியே. (59)

எழுஞா யிறுகண் டிரியும் மிருள்போல்
முழுவெம் பவமோ டமுன்வந் தருள்வாய்
செழுமா மலர்தே னொழுகுந் தடமார்
மழுமா னுடையார் மகிழ்மா மணியே. (60)

கானத் துறைகண் டிடுமன் பர்களும்
மோனத் துறைமுற் றியமா தவரும்
ஏனத் துறையோ ருமிறைஞ் சவருள்
ஞானத் துறைநன் மணிநா யகமே. (61)

காணுற் றிடுமெய்ப் பொருளுங் கருதில்
வீணுற் றழிவுற் றிடும்மெய் யெனவே
சேணுற் றவர்சிந் தைமகிழ்ந் துதொழ
மாணுற் றபதந் தரும்மா தாசே. (62)

என்னைத் துயரத் தினிலெய் திடுமா
றன்னைக் குளமென் பதறிந் திலன்யான்
முன்னைப் பவமா மெனினும் முனியா
தின்னற் பவமெற் கணுகா தருள்வாய். (63)

பொன்மா லைபுனைந் தபுரா தனிசொல்
நன்மா லையையென் றும்நயந் தெளியேன்
வன்மா லமனத் திடர்மா றவருள்
பன்மா லையணிந் தபரம் பொருளே. (64)

எரியா கியமா மலையே யருணா
கிரிநா தர்திருப் புகழ்கிள் ளைமொழிக்
குரியான் மயில்வீ ரனையன் றுதவும்
அரியா யருளன் பர்சிகா மணியே. (65)

கார்கொண் டுயர்கண் ணபிரா னுடனே
நேர்கொண் டுதயஞ் செய்நெடும் புகழே
பார்கொண் டெழின்மிக் கபசுந் தமிழொண்
டார்கொண் டருள்தந் ததயா நிதியே. (66)

பொன்னே புகழ்மே வியபூ டணமே
மின்னே திகழ்ஞா னவிளக் கொளியே
அன்னே கவுமா ரியணங் கரசே
யென்னே யருள்செய் திலையென் குறையோ. (67)

சேயா கியவென் மொழிநின் செவியிற்
றோயா ததுமென் றன்வினைத் தொடர்போ
மாயா மலமா யைதவிர்த் தருளும்
தாயா கியிருந் ததயா பரியே. (68)

அன்புற் றடியார் கள்வணங் கிடவே
துன்பக் கடல்நீ றெழுமா றுதுடைத்
தும்பர்க் குமுரு வமுதந் தரும்நின்
பைம்பொற் கழலென் றுபணிந் திடுவேன். (69)

கருணா நிதியா கியகா ரணியே
தெருணன் மறையோ லமிடுந் திருவே
மருணீர் மையகற் றுமனோன் மணியே
சரணா கமலந் தருவாய் ததியே. (70)

போன் புடையார் கள்பெரும் பொருளே
சேருந் தவயோ கியர்சிந் தையிலே
நேருஞ் சிவஞா னநிரா மயமே
ஆரும் பிணிநோய் களகற் றுவையே. (71)

நூலேந் தியநுண் ணிடைமெய்ப் பொருளே
வேலேந் துமகப் பெறுமின் கொடியே
மாலேந் திமயங் கவிடா தெனையே
காலாந் தகர்தீ மைகளைந் தருளே. (72)

இருக்கங் குடிமே வியெழுந் தருளும்
மருக்கொண் டசடா முடிமா தரசே
அருக்கன் சுடர்போ லொளிரா யிரமாந்
திருக்கண் கள்படைத் தசெழுஞ் சுடரே. (73)

புரம்நீ றுபுரிந் தபுரா தனர்தம்
அருகா கிவளர்ந் தவருட் கொடியே
இருதாண் மலரென் றுமிறைஞ் சினர்பால்
வருதீ மைமயக் கமறுத் தருளே. (74)

சிந்தா குலமா னதுசிந் திடவும்
நந்தா ததவங் கள்நயந் திடவும்
எந்தா யெளியே னிடரே கிடவும்
வந்தா தரவா கவரந் தருவாய். (75)

கருமா னுபவங் கள்களைந் திடவும்
தருமா னுபவங் கள்தழைந் திடவும்
வருவாய் வரம்நல் கமனோ லயமே
திருமா லொடுவந் தசெயப் பொருளே. (76)

தருமத் தினுருக் கொடுதங் கிவளர்
அருமைத் தவமே வியவம் பிகையே
பருமத் தகயத் துரிபற் றினர்பால்
வருமுத் தமபத் தர்மனப் பொருளே. (77)

கல்லா தவனு கவிருந் திடினும்
சொல்லா குமலங் கல்தொடுத் தணிவேன்
வல்லாய் மனவாக் கினில்வந் தருள்வாய்
நல்லாய் நளினத் தடநா யகியே. (78)

ஆசா னைமறந் தவனு யிடினும்
பூசா விதிபோ தமிலே னெனினும்
மாசா னதிலா தமனந் தருவாய்
தேசார் தருதெய் வசிகா மணியே. (79)

மனமா திகடந் தமனோன் மணியே
வினையா திகடந் துவிளங் குமையே
உனையா திபரம் பொருளென் றுணர்வேற்
கனைநீ யருளா விடிலார் துணையே. (80)

நாரா யணிநான் முகனே முதலோர்
பாரா யணவே தபரம் பொருளே
வாரா யிதுவே ளைவரந் தரவே
தாரார் புயமே வுசவுந் தரியே. (81)

நன்று யகுணங் களைநல் கிடுவாய்
ஒன்று கியனந் தமுமா கியுகந்
தன்று டல்புரிந் தவருக் கமையப்
பொன்று ளமிடுங் காபூ ரணியே. (82)

வையம் புகழ்நல் லைவளம் பதியோர்
மெய்யன் பர்களா கிவிளங் கிடவும்
செய்யுந் தொழின்மேன் மைசெயம் பெறவும்
உய்யும் படியூ தியமுந் தருவாய். (83)

உன்னைப் பொருளா கவுணர்ந் தறிவேற்
கின்னற் றுயரெங் ஙனமெய் துறுமால்
அன்னப் பெடைபோ லுமணங் காசே
வன்னக் கிளிகோ கிலமா மயிலே. (84)

ஈட்டும் பலதுன் பமுமென் றனையே
வாட்டுஞ் செயல்கண் டுமவல் வினையை
ஓட்டும் படிசெய் வதுனக் கரிதோ
நாட்டுங் கருணா நிதிநா யகியே. (85)

அண்ணா மலையா ருண்மே விவளர்
உண்ணா முலையம் மையுகங் கடொறும்
பண்ணா யிரமா மறையும் பரவும்
கண்ணா யிரமே வியகண் மணியே. (86)

வஞ்சத் தொழில்வந் தணுகா மலும்நன்
னெஞ்சத் தொழிலே நிலையா கும்வணம்
மிஞ்சுற் றிடுமூ தியமேன் மையருள்
பஞ்சக் காரூ பபயங் கரியே. (87)

இனிதா னகரும் பிரசத் தெளிவே
முனிவோர் தொழுமுக் கனிசெஞ் சுவையே
தனியா கியசீ னிசருக் கரையே
அனையே யருள்செய் வதுனக் கரிதோ. (88)

தேனோ டுகலந் திடுதெள் ளமுதே
ஊனோ டுயிரா கியவொண் பொருளே
வானோ டுவளர்ந் தமகே சர்மகிழ்
மீனோ டுதடங் கண்விளங் கிழையே. (89)

கள்ளத் தனமென் பதுகண் டறியார்க்
கெள்ளுக் குளிருந் திடுமெண் ணெயென
உள்ளக் கமலத் திலுகந் தருள்வாய்
கொள்ளக் குறையா தநிதிக் குவையே. (90)

மாமா லைமணிப் பணிபூ ணிநெடும்
தேமா லைபுனைந் தசிகா மணியே
நாமா லைவனைந் திடுநன் றியுளோர்
பாமா லையணிந் தபரா பரியே. (91)

கட்டளைக்கலித்துறை.

நாளுக்கு நாள்வளர் திங்களைப் போனன்மை யேசெழிக்கும்
வாளுற் றிடுந்திரு மாணிக்க மேமன வாக்கினிலுன்
றாளுக்கன் பாகத் துதிக்காடல் செய்வார் தந்தருள்வாய்
கோளுற் றிடும்பவம் தீர்த்தா தரிக்குங் குணக்குன்றமே. (92)

நெஞ்சே யுருக்கமில் லாதவ னென்று நினைந்துவிடேல்
அஞ்சே லெனவந் தருள்வா யெனக்கருள் வாரிதியே
மின்சேரு நுண்ணிடைச் செஞ்சோதி யேவிடை மேலுகந்தாய்
உன்சேவ கஞ்செயப் பஞ்சாம் பவவினை யுண்மையன்றே. (93)

தாங்கா வறுமையி னல்நொந்து நாளுந் தளர்ந்திடுவோர்
நீங்காக் கவலையை நீத்தருள் வாய்நெடு மாறங்கையே
தேங்காய்க் கினிய விளநீரி லெங்கணுஞ் சேர்ந்துறைவாய்
ஆங்கால நன்மை யருளா யிரங்கண்க ளாமன்னையே. (94)

ஞானம் பழுத்த கனியே கனியினு ணற்சுவையே
வானம் பழுத்த மருந்தே மனத்துயர் மாற்றியருள்
மோனம் பழுத்த தவயோகி யர்க்கருண் முற்றுவிக்கும்
கானம் பழுத்த தமிழ்ப்பா வணிந்திடுங் காரணியே. (95)

செந்தேன் கலந்திடுந் தெள்ளமு தேதெய்வத் தீங்கரும்பே
வந்தே யுனைத்தொழும் மெய்யன்பர் கேட்கும் வாங்கொடுப்பாய்
நந்தேய் மிடற்றம்மை யேநமன் வந்துநண் ணுநவண்ணம்
தந்தே யருளுநன் மலர்ப்பாத பங்கயந் தஞ்சமெற்கே. (96)

உண்மைப்பொருளென் றுனையே யுணர்ந்துமெய்யோங்கறத்தின்
றண்மைப் பொருளென் றுலகோர் துதிக்குந் தயாநிதியே
வண்மைப் பொருள்களும் பேரன்பும் வாய்மைப் புகழினுடன்
எண்மெய்ப் பொருளினொ டெல்லா நலந்தரு மீஸ்வரியே. (97)

உன்பாதந் தஞ்சமென் றன்னா திருந்திடு வேனுளற்று
மென்பாவ மோவஞ்ச நெஞ்சனென் றோநன்மை யீந்திலையே
முன்பாகி வந்தடி யாரிடர் தீர்த்திடு முக்கண்ணியாம்
அன்பாகு மன்னை யடியேன் பிழைபொறுத் தாண்டருளே. (98)

எத்தனை காலம் புவியாண் டிருப்பினு மேய்ந்தகலை
யத்தனை யுக்தெளிந் தாராய்ந் திருப்பினு மாதிசைவ
வித்தென்று மந்தண ராய்ப்பிறந் தாலுமென் மெய்யன்பிலார்
முத்திக்கு கந்தநின் பாதார விந்தத்தை முன்னிலரே. (99)

பொன்னே மணியே புகழ்மூத்த மேபுயல் வான்பொருந்தும்
மின்னே கனிந்தசொல் மெய்யன்பர் நாளும் வியந்துதொழத்
தன்னே ரிலாப்பதந் தந்தருள் செய்யுந் தயாநிதியே
அன்னே யெனக்குன் னருள்தந்தி டாவிடி லார்துணையே. (100)

எல்லா வுலகங் களுக்கும் பரம்பொரு ளென்றென் றுமே
சொல்லார்ந் திருக்குந் தயாபரி யேசுந்த ரேசாந்நாள்
வில்லார்ந்த கங்கையை வேணியி லேவைத்து மேமறைத்தார்
நல்லாயுன் கோபத்துக் கஞ்சியன் றோமுன்னை நாளையிலே. (101)

எண்ணாயி ரஞ்சம ணக்குழு வைக்கழு வேற்றிடவே
பண்ணா ரிளவண் டமிழெழு தேடு படர்ந்தவைகைத்
தண்ணார் புனலெதி ரேறும் படிவிட்ட சம்பந்தருக்
குண்ணா ரமுதருள் பெண்ணா ரமுதுன் னடைக்கலமே. (102)

நானோ கவலைக் கிருப்பிடங் கொண்டிங்ங னானுமே
யேனோ புவியிற் பிறந்தேனந் நான்முக னேன்படைத்தான்
வானோருங் காண்டற் கரிதாஞ் சிவானந்த வாரிதியில்
தானே யுதித்திடுந் தாயே யெனக்குன் தயாவருளே. (103)

வேறு.

நீயே தஞ்ச மென்று வணங்கும் நிலைமேவும்
தூயோ ரோது மன்பின் வலைக்குத் தொடர்வாளே
மாயோ னோடும் வந்து பிறந்தருள் மகமாயி
சேயே னுன்றன் சேவடி சிந்தனை செய்தேனே. (104)

மந்தா கினிவா ளரவஞ் சிறுபிறை வளர்கொன்றை
யந்தா ரோடு மாசறு கென்பன வவைசூடித்
தொந்தோ மென்றே யாடல் புரிந்தவர் துணையாகும்
எந்தாய் தந்தா ளுன்றன் மலர்த்தா ளிணையம்மே. (105)

நல்லோர் வந்தெந் நாளும் வணங்கும் நலமிக்காய்
புல்லோ ரென்றுங் கண்டறி யாத புகழ்க்குன்றே
யெல்லாம் வல்ல பரம்பொரு ளாகி யிருப்பாய்நீ
யல்லால் வேறு கதிக்கிட மில்லை யருட்கொம்பே. (106)

வாதா டுஞ்சூர் தங்குலம் வென்றிடு மகமாயி
தீதா கும்பிணி வந்தணு காதருள் திரிசூலி
நீதா னெங்களை ரட்சித் தருள்புரி நெடுநாளும்
ஆதா ரம்பிறி திலைதிரி யம்பகி யருளாயே. (107)

நிழலா யெங்கும் நிறைந்தவ ளாகிய நிசரூபி
அழலாய் மண்புனல் வளியாய் வெளியா யருளாகித்
தொழுவார் வினைதெறு பொருளா யிருவினை தொடராதே
கழலா கியபர கதியெற் கருள்வது கடனம்மே. (108)

வேறு.

ஐங்கரக் கடவுளை யாறு மாமுகப்
புங்கவன் றனையருள் புனித வல்லியே
சங்கரி யுடன்பிறந் தருளுஞ் சங்கரி
யெங்களைக் காப்பதுன் கடமை யென்றுமே. (109)

தென்னவன் றிருமக ளாகித் தேவரும்
உன்னரும் புகழ்படைத் தோங்கு மன்னையே
மன்னிய நல்லைவாழ் மாரி யம்மையே
என்னைநீ காப்பதுன் கடமை யென்றுமே. (110)

நின்பதாம் புயந்தனை நினைந்து நாடொறும்
அன்பினல் வழிபடு மவனி மாந்தர்கள்
துன்பமா னவையெலாம் துடைத்துத் தூயபே
ரின்பமா னவையெலாம் எய்த நல்குவாய். (111)

தண்டைபா டகஞ்சிலம் பணிந்த தாள்களும்
அண்டர்யா வரும்புகழ் பசும்பொ னுடையும்
மண்டுகோ மளமணிப் பதக்க மாலையும்
கண்டுகண் களிப்புறக் கருமம் நீங்குமே. (112)

செம்பொன்மா மணிமுடி திகழுங் கோலமும்
நம்பினோர்க் கருள்செயுங் கருணை நாட்டமும்
உம்பர்மா முனிவரா ரெவர்க்கு முண்மைகூர்
அம்பிகை குமுதவா யழகுங் காண்மினே. (113)

இரண்டுசூ ரியரிரு செவியி லேய்ந்தென
உருண்டைமா மணிக்குழை யொளியின் செய்கையால்
மருண்டபே ரிருளெலா மயங்கி வானுறத்
தெருண்டபே ரொளியினைச் சிந்தை செய்மினே. (114)

சாவிமா முனிவரர் தவத்திற் ஞேன்றிய
சீலமா மாயினர் தினமும் போற்றிட
வேவியா யிருந்துகாத் தருளி மெய்த்தரும்
கூலமும் நலங்களுங் கொடுக்க வேண்டுமே. (115)

அரியமா மறைமுழங் கிடுவ தாமெனக்
கரியமா மூழங்கிடுங் கமல மாலையும்
உரியவேய் புயங்களி னுத்த ரீயமுந்
தெரியவே கண்டிடிற் றீமை தீருமே. (116)

நான்முக னென்றனைப் படைக்கும் நாளிடை
மேன்மையை யமைத்திலன் சிறிது மேதகு
ஞானதீர்த் தக்கரை நயந்த செல்வியே
யானுனைப் பணிந்தன னருள்செய் நன்மையே. (117)

இப்பெருந் துயாமுன் னியற்றுந் தீமையோ
ஒப்பருந் திருவடிச் சரண முன்னினேன்
எப்பொழு தேய்ந்தவித் துயரம் போக்குவாய்
அப்பணி செஞ்சடை யனந்த ரூபியே. (118)

அடியனேன் முன்னைநா ளாற்றுந் தீவினைக்
கொடியனே னென்னினுங் கருணை கூர்ந்துநீ
மிடியெலா மகற்றிமெய் வரந்தந் தளுவாய்
படிபுகழ் நல்லையம் பதிமெய்ச் சோதியே. (119)

இனந்தருந் தினகர ரெண்ணில் கோடிபோல்
அனந்தமா யிரந்திருக் கண்க ளாகியே
கனிந்தபே ரருளொடு வயங்குங் காட்சியை
நினைந்திட யாவர்க்கும் வினைக ணீங்குமே. (120)

அடைக்கல மாகவந் தரிய நின்பதம்
இடைப்பிரி யாமலே யிறைஞ்சு வேன்றனைக்
கடைக்கண்பார்த் தருளியென் கலியை மாற்றுவாய்
விடைக்கொடி யாரிடம் விளக்குஞ் சோதியே. (121)

என்றுய ரகற்றிநல் லின்ப நல்குவாய்
நன்றுறை நல்லையம் பதியில் நாடொறும்
பொன்றுறை வாவியின் புடையிற் றங்கியே
மின்றிகழ் மேனியாய் விளங்கு மம்மையே. (122)

வேறு.

எங்க ளும்புகழ் ஞானவா வியின்கரை யிருக்கும்
துங்க மாகிய கோயிலிற் றோன்றிய திருவாம்
செங்க ணாயகி சேவடி பணிந்திடக் கிடைக்கும்
கங்கை யாதியாம் புனல்படி நலத்தொடுங் கதியே. (123)

ஆதி யந்தமுங் கடந்தரு ளருமறைப் பொருளே
ஓது மன்பர்த முள்ளமாஞ் சினகரத் தொளிரும்
மேத குஞ்சுக ஞானவா னந்தமெய்ச் சுடரே
சீத பங்கயச் சீரடி யனுதினந் துணையே. (124)

மகிட னோடமர் வென்றிடும் வாகைவேற் படையாய்
திகழு வாமதி யனந்தமாய்ச் செழித்தொளிர் திருவே
அகில மெங்கணுஞ் சராசரம் படைத்தரு ளணையே
இகப ரங்களுண் டாக்கியே யிசைதரும் பொருளே. (125)

வேறு.

மன்னு சாலி முனிவர் மாபினோர்
நின்னை யேபொரு ளாக நினைந்துளத்
தன்னை யென்று வணங்கிடு மன்பர்கட்
குன்னு மெய்ப்பொருள் யாவு முதவுவாய். (126)

வேலை யூடெழு வெவ்விட முண்டவர்
பாலெ ழுந்தரு ளும்பர மேஸ்வரி
சாலி மாதவர் தம்மா பெய்திய
சீலர் கட்கருள் செய்வதுன் பாரமே. (127)

கண்ணி னுண்மணி யாகிக் கலந்தவள்
எண்ணும் சொற்பொருள் யாவுங் கடந்தவள்
மண்ண ளந்தருள் மாயன்ச கோதரி
வண்ண மாமலர்ப் பாதம் மறந்திலேன். (128)

கஞ்ச மாமலர் வாவிக் கரையினில்
செஞ்சு டர்க்கொழுந் தாயொளிர் செல்வமே
தஞ்ச மென்றுனை யேசர ணெய்தினோம்
அஞ்ச லஞ்சலெ னுவருள் செய்வையே. (129)

என்றும் தேவலன் மாமா பெய்திய
நன்றி சேர்சவு டப்பன் நயந்தசொல்
லொன்று மாலை யுகந்தரு ளுத்தமி
வென்றி நன்மை யருள்செய வேண்டுமே. (130)

சிங்க வாகன ரூப திகம்பரி
யெங்கு மாகி யிருந்த பராம்பரி
சங்க பாணிதன் றங்கை சததள
பங்க யப்பதம் பாலித் தருள்வையே. (131)

வேறு.

இப்பொழு தென்னிடத் தேய்ந்த வின்னலை
எப்பொழு தகற்றிந வின்பம் நல்குவாய்
செப்பரும் புகழ்நிறைந் திலங்குஞ் செல்வமே
ஒப்பருந் திருநலூ ருகந்த வன்னையே. (132)

சொல்லவேண் டுவதெலாஞ் சொல்லி யாற்றினேன்
வல்லப மிகுந்திடும் வறுமை நோய்களும்
அல்லலுந் தீர்த்தெனக் கருள்செ யம்பொனூர்
நல்லையம் பதிவளர் ஞான ரூபியே. (133)

ஈதொரு சென்மமோ எந்த நோமும்
வாதுறுந் துயரமும் வறுமை நோய்களும்
காதுதல் கண்டும்நீ கருணை செய்திலாய்
மேதகு நல்லைவாழ் விமல ரூபியே. (134)

வெந்தழன் மெழுகென வுருகி மெய்ப்பதஞ்
சிந்தனை செய்திடக் கிருபை செய்குவாய்
அந்தமில் வளைப்புட னமைந்த நல்லையிற்
சுந்தர ரூபமாய்த் துலங்கும் சோதியே. (135)

எங்களில் விடந்தனி லெந்த நோமும்
பங்கயத் திருவிருந் தருமை பாலித்துத்
தங்கமா மணிகளுஞ் சகல செல்வமும்
சிங்கவா கனியருள் செய்ய வேண்டுமே. (136)

தின்மையா னவையெலாஞ் சிதைந்து போகவும்
நன்மையா னவையெலாம் நண்ணி யோங்கவும்
பொன்மய மாகவே பொருந்தி யெங்களும்
சின்மய வடிவமாய்த் திகழுஞ் செல்வியே. (137)

அருளொரு வடிவமா யமைந்த ஆதியே
இருளகன் றிடச்சுட ரிலங்கு மேனியாய்
மருளுறு தொண்டர்தம் மயக்கம் போக்கியே
தெருளுமெய்ஞ் ஞானமே தெருட்டுந் தெய்வமே. (138)

வேறு.

சாலிமா தவர்மாபேர் தழைத்தோங்க வெந்நாளுந் தரும மோங்க
வேலியாய் நீயிருந்து காத்தருள வேண்டுமென வேண்டி னோம்யாம்
ஞாலமார் புகழ்பாவு நல்லைவளம் பதிவயங்கும் ஞான வாவிச்
சீலமாங் கரைமருங்கிற் செங்கதிரோ யனந்தமெனத் திகழு மம்மே.()

வேறு.

வையகம் புகழும் நல்லையம் பதியில்
வந்தெழுந் தருளியிவ் வுலகோர்
செய்தவப் பயனாய்க் கருணைவா ரிதியாய்த்
தேவரும் முனிவரும் போற்றும்
மெய்யுடைப் பொருளா யெங்கணும் நிறைந்து
வேண்டினோர் வேண்டிய படியே
உய்யுமா றருளி நிதியெலாங் கொடுக்கும்
ஒருதனிப் பரம்பொரு ளுமையே. (140)

வேறு.

அனத்திற் றோன்றிய நான்முக னாதியா
மண்ட கோடிக ளாக்கியு மன்பர்தம்
மனத்திற் றோன்றும் பராபர வஸ்துவே
மாக மெங்கும் வளர்ந்த சொரூபியே
இனத்திற் றோன்றும் சிகாமணி யேயெளி
யேன்பெ ருந்துய ரத்தினை மாற்றுவாய்
கனத்திற் றோன்றிய மின்னலொப் பாமெனக்
கண்க ளாயிரங் கொண்டோளி ரம்மையே. (141)

பொன்பொ ருந்தும் புளிய நகர்தனில்
புனித ஞானத் தடங்கரை தங்கிமெய்
மின்பொ ருந்தும் சடாமுடி கொண்டிடும்
வேத போத புராதனி புங்கவி
அன்பர் தந்தவத் தாலினி தெய்திய
ஆயி ரங்கண் ணருட்பெருஞ் சோதியே
நன்ப தங்கொடுத் தெங்களைக் காத்தருள்
ஞான தீர்த்தத் தடங்கரை யம்மையே. (142)

வெள்ளி மால்விடை மீதுவந் தன்பர்தம்
வினையெ லாந்தவிர்த் தாளும் விமலையே
உள்ள மென்பதில் வஞ்சக மொன்றிலா
வுத்த மர்க்குவ ரந்தருந் தெய்வமே
தெள்ளு பைந்தமி ழேயருள் வாரியே
தேவ ரன்றுக டைந்த வமிர்தமே
தள்ள ரும்புகழ் ஞானத் தடங்கரை
தங்கு மாயிரங் கண்பெறு மம்மையே. (143)

கொஞ்சு கின்ற பசுங்கிளி சோலையிற்
கூட்ட மாகக் கொழுங்கனி யுண்ணவும்
மஞ்சி னம்பொழி லெங்கணுந் தங்கியே
மாட கூடங்கண் மீதுமு ழங்கவும்
மிஞ்சு கின்றவ லைதொறும் சங்கினம்
வீசு வெண்டர ளங்கண் மிளிரவும்
விஞ்சு வான்புகழ் ஞானத் தடங்கரை
மேவி நின்றவி சாலாட்சி யம்மையே. (144)

எங்க ணுங்கமழ் நந்தவ னங்களும்
ஏர்பு னைந்த கமலத் தடங்களும்
தங்கி யேமது வுண்டெழில் வண்டினந்
தங்க ளின்னிசை பாடிக் களிக்கவும்
அங்க ணெய்து மடந்தையர் சாயல்கண்
டஞ்சி மென்சிறை மஞ்ஞைக ணீங்கவும்
புங்க வர்தினம் வந்து பணிந்திடும்
புளிய மாநகர் மேவும் புராதனி. (145)

வேறு.

உம்பர்நா டுறையுங் கற்பகக் காவின்
ஓங்குதீங் கனிரசச் சுவையே
வம்பறு மலரின் மணமுமா யெள்ளுள்
வயங்கிடு மெண்ணெயே போலும்

பம்புமான் பாலி னிருந்திடும் நெய்போற்
பாவியே யெங்கணு மிருக்கும்
செம்பொன்மா மணியே செழுஞ்சுடர்க் கொழுந்தே
செல்வமே நன்மைதந் தருளே. (146)

காலையி லெழுந்து பன்மலர் பறித்துக்
கனிந்தபே ரன்பொடுந் தொடுத்து
மாலைவேய்ந் துனது மலர்ப்பதம் பணிவேன்
மயக்கெலாந் தவிர்த்தருள் புரிவாய்
சோலையின் மதுவுண் டின்னிசை பாடிச்
சுரும்பின முழக்குபே ரொலியும்
ஆலயந் தனிலே யிடையறு தியங்க
ளார்ப்புமே செவியுகந் தவளே. (147)

உத்தம குணங்கள் யாவுமே நிறைந்த
வுயர்பெரும் ஞானவான் கரையில்
வித்தக வடிவா யுலகெலாம் நிறைந்து
வேதவே தாந்தமுங் கடந்த
சுத்தமெய்ஞ் ஞான சுயம்பிர காச
சொரூபமாய்த் தோன்றிய சுடரே
மெத்தவுங் கவலை யெய்தினே னவற்றை
விலக்கிநீ யருள்செய வேண்டும். (148)

மங்கையர் கூந்தல் கண்டகோ கிலங்கள்
மழையெனக் கலங்கிமெய் வாடத்
துங்கமா மயில்க ளுளங்களித் தாடுஞ்
சோலைசூழ்ந் திலங்கிய துறைசூழ்
பங்கய மலர்க ளெங்கணும் பாவிப்
பரிமளங் கமழ்ந்திடுந் தடஞ்சேர்
அங்கணு யிரங்கொ ளம்மையே யுன்ற
னடைக்கலங் காத்தருள் புரியே. (149)

கங்கையே முதலாந் தீர்த்தங்கள் படியேன்
காண்டகு நூனெறி யறியேன்
புங்கவ ராகும் புனிதரைப் பணியேன்
புகழ்மிகுந் தருமமும் புரியேன்
சங்கையில் லாத பவங்களே புரிந்த
தமியனேன் றனக்குமெய் வரங்கள்
எங்ஙனங் கொடுப்பாய் புளியமா நகரி
லிலங்குமா யிரங்கண்மா மணியே. (150)

பண்ணவர் முதலோர் புவியுளோர் நாகர்
பரவிய பெரும்புக ழுடையாய்
எண்ணரும் புவனம் யாவையும் படைத்தும்
எளிதினி லவையெலாங் காத்தும்
திண்ணமாய்ச் சிதைத்தும் சிற்றில்கொண் டாடும்
செல்வமே வியதிருக் குழந்தாய்
கண்ணனூ ருகந்த காரணி யடியேன்
கண்பிணி மாற்றியே யருள்வாய். (151)

அன்னசா லைகளும் கல்வியே பயிலு
மருந்தமிழ்ச் சாலையும் அறத்தின்
மன்னிய தண்ணீர்ப் பந்தல்சேர் வளமும்
வயங்கிய திருவிழா வணியும்
பொன்னினூன் மார்பர் வேள்வியின் புகையும்
போதவே தாகம முழக்கும்
கன்னிய மமுஞ்சேர் நல்லையம் பதியில்
ஞானவா வியினுகந் தவளே. (152)

செந்தமிழ்ப் புலவர் சங்கநூற் பொருளும்
தேர்ந்தவே தாகமப் பொருளும்
பந்தமில் தவத்தோர் யோகத்தின் பொருளும்
பகர்ந்திடு மாலயங் களிலே

சந்ததம் நடந்து வந்தனை புரியும்
தகவுற மன்பர்சொற் பொருளும்
எந்தகா ளினும்பே ரின்பமாய் நிறைந்த
எழின்நலா ரிலங்குமா மணியே. (153)

வேறு.

ஆனை டுங்கொடி யங்கணர் பங்குறை
மானை டுங்கண் மாகத வல்லியே
கானை டுந்துழ வங்கமழ் கண்ணியன்
வானை டும்புகழ் தங்கை மகேசையே. (154)

தஞ்சம் நின்சா ணம்பிறி தில்லையால்
வஞ்ச கர்க்குற வாருத லின்றிநன்
னெஞ்ச கர்க்குநட் பேநிலை யாகவும்
எஞ்ச லில்வா மெற்கரு ளம்மையே. (155)

போற்றி லேனின் திருவடி பூசனை
யாற்றி லேனரு ளன்பு தழைந்திடச்
சாற்றி லேன்றமிழ் மாலை தமியனேற்
கேற்ற நல்வா மென்றருள் செய்வையே. (156)

அனந்த மாம்பிழை யாற்று மடியனேன்
நினைந்துன் பாத மடைக்கலம் நேர்ந்தனன்
கனிந்த பேரருள் கொண்டெனைக் காத்தருள்
புனைந்த வார்சடைப் புண்ணிய ரூபியே. (157)

தாளி னுல்நமன் றன்னை யுதைத்தவர்
வேளை யங்கி விழியி லெரித்தவர்
காள வெவ்விட முண்ட களத்தினர்
நாளு மேமகிழ் நன்மணித் தீபமே. (158)

தாயி ருப்ப மகவு தயங்குமோ
நீயி ருப்பக் குறைவந்து நேருமோ
சேயி சும்பொளிர் செங்கதி ரென்னவே
ஆயி ரங்க ணமைந்திடு மன்னையே. (159)

உயர்ந்த மானிட யாக்கையை யுற்றுமே
அயர்ந்து னைப்பணி யாவிடி லாவதென்
வியந்து னைத்தொழும் மெய்மையு மன்புமே
நயந்தெ னக்கருள் நாளுமெ னம்மையே. (160)

வேறு.

முப்ப தோடிரண் டாகிய வறங்களை முயன்றே
யொப்ப ரும்பல வுயிர்களைக் காத்திடு முமையே
செப்ப ரும்புகழ்ச் சிவக்கொழுந் திடங்கலந் தெவர்க்கும்
மெய்ப்ப தந்தரு மம்மையே வேதநா யகியே. (161)

தினக ரன்றனைக் கண்டலும் சிதைந்திடு மிருள்போல்
உனைவ ணங்கினர்க் குற்றிடும் பிணியெலா மகற்றி
மனனு றஞ்சுக நலங்களை வழங்கிடு மனையே
எனையும் நின்பெருங் கருணையா லினிதுகாத் தருளே. (162)

வேறு.

அக்கினி குண்டமீ தோங்கும் அன்னையே
எக்குல மாந்தருந் தழலை யேந்தியே
தொக்கநின் கழலிணை தொழுது போற்றிட (163)
அக்கணத் தருள்செயா யிரங்க னம்மையே.

வேறு.

செஞ்சுடரே வான்மதியே சீராருங் கற்பகமே
மிஞ்சுசுடர் மாமணியே மேலாகும் பொற்சுடரே
தஞ்சமென நின்னைச் சரணடைந்தோர் தீவினையைப்
பஞ்செனவே யாக்கியருள் பாலிக்கும் பார்ப்பதியே. (164)

எப்பொருளுந் தானா யிருந்தருளும் மெய்ப்பொருளே
ஒப்பரிய வேதாந்தத் துச்சிதனில் வீற்றிருப்பாய்
செப்பரிய மெய்ஞ்ஞானந் தேர்ந்தவர்கள் பாமாலை
அற்புதமாய்ச் சூடுகின்ற ஆயிரங்க ணம்பிகையே. (165)

வான்பொருள்க ளுண்டாகு மாகமிகும் பாற்கடலே
தேன்பொருள்க ளுண்டாகுந் தேசுலவும் பூமணமே
ஆன்பொருள்கள் மேய்த்திடுவோ னரும் பசுந்துளவோன்
தான்பொருளாய்த் தேடியதோர் தங்கைசிவ சங்கரியே. (166)

என்கோ முங்கவலை யெய்திமிக வாடுதற்கு
முன்னேநான் செய்வினைகள் முற்று முணர்ந்திலனே
அன்னே யவையனைத்து மகற்றி யருள்புரிவாய்
தன்னேரில் நல்லவளர் சங்கரி மனோன்மணியே. (167)

வேறு.

கொந்து லாவு மணமலர்ச் சோலைசூழ்
கோக னகத் தடங்கரை கொண்டருள்
எந்தை யாயெனு மாயிரங் கண்ணுடை
யீஸ்பரி பாஞ் சோதி மனோன்மணி
சிந்தை மேவுந் தமிழ்மொழிப் பாவுரை
செய்தன னுளத் தன்பு செழிக்கவே
சந்த தம்புகழ் மாதவத் தேவலன்
றன் மரபு வரும்சவு டப்பனே. (168)

வாழி.

என்காளு மாயிரங்கண் ணம்மை வாழி
யிசைமிகும்வே தாகமங்க ளனைத்தும் வாழி
நன்னுமம் பொருந்தியமெய்ஞ் ஞான தீர்த்தம்
நாடோறும் வாழிமிக நலமே வாய்ந்து
தன்னேரி லந்தணரே முதலா யுள்ள
தாரணிவாழ் மாந்தரெலாந் தழைக்க வாழி
மின்னுரு மழைபொழிந்திவ் வுலகம் வாழி
மேதினிவாழ் வேந்தர்களும் மியந்து வாழி. (169)

வேறு.

ஆ ணந்தொழு மம்பிகை சேவடி
தேரு மன்பொடு சிந்தனை செய்குவோர்
சீர மைந்த பனுவலைச் செப்புவோர்
ஓர கங்கொ டுணர்ந்திடு கேள்வியர். (170)

ஓங்கு பேரொளி தங்கு முவா மதி
ஈங்கு தித்தன போலு மிமையவர்க்
காங்க ளித்திடு வானமு தாமெனும்
பாங்கு றுந்தமிழ்ப் பாமணி வாழியே. (171)

ஸ்ரீ
மாரியம்மன்
தோத்திரப்
பாமாலை.

முற்றிற்று.

உ

சிவமயம்.

புளியம்பட்டி ஞான தீர்த்தக்கரை

ஆயிரங்கண் மாரியம்மை மீது.

கும்மி.

விநாயகர் காப்பு.

மங்களஞ் சேரும் புளிய நகர்வளர்
மாரியம் மன்கும்மிப் பாட்டுரைக்க
ஐங்கரஞ் சேரும்வி நாயக னாகிய
ஐயன் பதாம்புயங் காப்பா மே. (1)

போதங்கொள் ஞானப் பொருணலந் தந்திடும்
புண்யசொ ரூபியைப் போற்றுதற்குத்
தாதங் குளக்கரை தன்னி லுகந்திடுந்
தந்தி முகன்பதங் காப்பாமே. (2)

முத்தி வழங்கும் புளிய நகர்வளர்
மோன சொரூபியைப் போற்றுதற்குச்
சித்தி விநாயக னருகு முதற்பொருள்
சேவடி சிந்தனை செய்திடுவாம். (3)

சிவபெருமான்.

அங்கணை ராயிரங் கொண்டரு ளன்னைமேல்
அன்பு மிகுங்கும்மிப் பாட்டுரைக்கக்
கங்கையைச் செஞ்சடை தங்கும் படிவைத்த
கண்ணுத லார்பதங் காப்பாமே, (4)

சுப்பிரமணியர்.

சீர்பொருந் துந்திரு நல்லை வளம்பதிச்
செல்வியின் மேற்கும்மிப் பாட்டுரைக்கப்
பார்பொருந் தும்பிணி நோய்கள் தவிர்த்திடும்
பால சுப்பிரமணியர் காப்பாமே. (5)

மகாவிஷ்ணு.

வேண்டும் வரந்தரு மாரியம் மாளெனும்
மெய்ப்பொருண் மேற்கும்மி சொல்வதற்குப்
பாண்டுரங் காவென வேண்டுகின் றோர்க்கருள்
பாலிக்குங் கண்ணனுங் காப்பாமே. (6)

மலையரசன்.

நேம மிகுந்த புளிய நகர்வளர்
நித்யகல் யாணியைப் போற்றுதற்குச்
சேம மிகுந்த மலையரச னெனும்
செங்கண்மால் பொற்பதங் காப்பாமே. (7)

சரஸ்வதி.

மோன பிரணவ மந்த்ர சொரூபியை
முக்கிய மாய்த்துதி செய்வதற்கு
ஞான சரஸ்வதி யம்மையென் நாவினில்
நல்ல பொருட்சுவை தந்தருளே. (8)

வாழவந்தம்மை.

ஆழ நெடும்புனல் ஞானதீர்த் தக்கரை
அம்பிகை மேற்கும்மி சொல்வதற்கு
வாழவந் தம்மை யெனும்புகழ் மேவிய
மாமணி பொற்பதங் காப்பாமே. (9)

மாகாளியம்மை.

வாகா யுலகந் துதித்து வணங்கிடும்
மாரியம் மன்கும்மி யோதுதற்கு
மாகாளி யம்மை யெனுமெம தன்னை
மலர்ப்பத மெப்போதுங் காப்பாமே. (10)

சவுடாம்பிகை.

மந்த்ர சடாட்சர ரூப சவுந்தரி
மாரியம் மன்கும்மிப் பாட்டுரைக்கச்
சந்தத மும்புகழ் தாய்சவு டாம்பிகை
தாளிணை யெப்போதுங் காப்பாமே. (11)

கருப்பசாமி.

ஓங்கிய பேரரு ளாகி விளங்கிய
உத்தமி மேற்கும்மிப் பாட்டுரைக்க
வீங்கு தடம்புய மேவுங் கருப்பைய
வீரவுத் தண்டனுங் காப்பாமே. (12)

நூல்.

துங்க மிகுந்திடு மாலயந் தன்னிற்
றுலங்குஞ் சிகரத்தின் பேரழகும்
தங்கும்நின் பேரரு ளும்புக ழும்சொலத்
தக்கவர் யாரிந்தத் தாரணியில். (13)

அன்புடன் வந்து வணங்கிடும் பேர்களுக்
காக்க முடனரு ளோக்கந் தரும்
பைம்பொற் றளிவளர் மாரியம் மேநல்ல
பாக்கியந் தந்தருள் செய்வாயே. (14)

நாடெங்கு மிக்க மழைபொழிந் தேபயிர்
நன்மை யுடனே வளர்ந்தோங்கிக்
காடும் வயலும் விளைந்து வேளாண்மையாங்
காட்சி கொடுத்தருள் மாரியம்மே. (15)

செ[illegible] க்திரு மேவும் புகழ்நல்லூர்
செல்வ மிகவுந் தழைத[illegible]ங்கர்
கொங்கலர் வாவித் துறைமருங் காயிடங்
கொண்டவ ளேயருள் செய்வாயே. (16)

சாலி முனிவர் திருமா போர்கிதஞ்
சந்நிதி முன்பாக வந்துதொழ
வேலியாய் நீயிருந் தாதரித் தேமிக
வேண்டும் வரங்களைத் தந்தருள்வாய். (17)

கல்வியும் ஞானமு மன்பும் மிகுந்திடக்
கற்றிடுஞ் சாலி முனிமாபோர்
செல்வ மனைத்துந் தழைத்தோங்க வருள்
செய்திடு வாயெங்கள் மாரியம்மே. (18)

பாவாக் கும்புகழ் நூலை யுணர்ந்திடும்
பாவல ராகிய நன்மைமிகும்
தேவாங் கர்குல மாந்தர்க ளுந்தொழச்
செல்வ மனைத்துங் கொடுத்தருளே. (19)

மற்று முயர்ந்த மரபினுள் ளோர்களும்
வந்துவந்து துதி செய்திடவே
நற்றவ மும்புகழ்ச் செல்வங்க ளாகிய
நன்மை கொடுத்தருள் செய்வாயே. (20)

எங்களைக் காக்குந் தயாநிதி யாக
எழுந்தரு ளுங்கவு மாரியம்மே
செங்கம லப்பதந் தந்து மிகுந்திடும்
செல்வமுந் தந்தருள் செய்வாயே. (21

மாதமும் மாரி பொழிந்திட வேயிந்த
மானில மெங்குஞ் செழித்திடவே
வேத முதல்வியாம் மாரியம் மன்பதம்
வேண்டிக் கும்மி யடியுங்கடி. (22)

மேகங்கள் கூடி மழைபொழியு மிந்த
மேதினி யெங்குஞ் செழித்திலங்கும்
நாகரீ கமாகப் பெண்டுக ளெல்லோரும்
நயந்து கும்மி யடியுங்கடி. (23)

ஞானதீர்த் தந்தனி லாடுவோ மங்குள
நல்ல மலர்களைக் கொய்தணிவோம்
தீன தயாபரி யாகிய வம்பிகை
சேவடி யைத்துதி செய்திடுவோம். (24)

புங்கவர் போற்றும் புளிய நகர்வளர்
புண்ய சொரூபியைப் போற்றிசெய்தால்
திங்களைப் போலு முகமுள்ள பெண்களே
செல்வமெ லாங்கொடுத் தாதரிப்பாள். (25)

ஆனதி னால்மன தன்புட னெல்லோரும்
ஆனந்த மாய்க்கும்மி பாடுங்கடி
ஞானமி குந்தமிழ் மாலை புனைந்தினி
நாள்தோ றும் போற்றுவோம் வாருங்கடி. (26)

நம்மைச் சிவானந்த போகத்தை யுண்டிட
நாளுங் கருணை புரிந்தருள்வாள்
அம்மச்சி யாரம்மை யன்புட னேதுதித்
தானந்த மாய்க்கும்மி பாடுவையே. (27)

தங்க நகைசெவி தங்கிடும் பெண்களே
சம்பத்துண் டாகிய பிள்ளைகளே
எங்கள் கலிதவிர்த் தின்பங் கொடுத்தரு
ளென்றுசொல் லிக்கும்மி பாடுங்கடி. (28)

அன்ன நடையைப் பழித்திடும் பெண்களே
யழகு வாய்ந்திடும் பிள்ளைகளே
மின்னலைப போலு மிடையுள்ள பெண்களே
வேண்டும் வரங்களைக் கேளுங்கடி. (29)

பட்டுப் புடைவைகள் கட்டிக் கொண்டுபழ
வர்க்கங்கள் தேங்காயுந் தான்படைத்துச்
சிட்டர்கள் போற்றிடுந் தெய்வ சிகாமணி
சீர்பதம் போற்றுவோம் வாருங்கடி. (30)

மஞ்சட் கிழங்கொடு புட்பங்க ளுங்கொண்டு
மாரியம் மாளுக்குப் பூசைசெய்ய
வஞ்சிக் கொடிபோ லிடையுள்ள பெண்களே
வாருங்க ளெல்லோரு மிப்பொழுதே. (31)

கூந்தலி லேமலர் சூடியும் வாவியிற்
குளித்த மஞ்சளின் வாடையுடன்
வாய்ந்திடுங் குங்குமப் பொட்டழ குங்கொண்ட
மங்கைய ரேகும்மி பாடுங்கடி. (32)

என்னென்று சொல்லுவோம் பெண்டுக ளேயெங்க
ளீஸ்பரி வாய்மொழி கேட்கவல்லோ
உன்னத மாமரங் கொண்ட குயிலெல்லாம்
ஓடி வருவதைப் பாருங்கடி. (33)

வர்ன மயில்போலுஞ் சாயல் பொருந்திய
மங்கைய ரேகும்மி பாடுங்கடி
சொர்ன மெனும்படி மேனி துலங்கிய
தோகைய ரேகும்மி பாடுங்கடி. (34)

கும்மி யடியுங்கள் கும்மி யடியுங்கள்
கொங்கலர் சோலைசூழ் ஆலயத்தில்
நம்மை யனுதினங் காக்க வெழுந்தருள்
நாயகி மேற்கும்மி பாடுங்கடி. (35)

தோடு சிமிக்கி யணிந்திடும் பெண்களே
சுந்தர ரூப சவுந்தரியாம்
பாடும் புகழ்கொண்ட மாரியம் மன்பதம்
பாடிக் கும்மி யடியுங்கடி. (36)

காப்புங் கொலுசுங் கனகத்தி னூற்செய்து
கையி லணிந்திடும் பெண்டுகளே
மாப்புகழ் கொண்டிடும் மாரியம் மன்துதி
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. (37)

கற்கண்டு சீனி சருக்கரை வெல்லமும்
கணுக்க ளார்ந்த கரும்பெனவும்
சொற்கொண்ட பெண்களே மாரியம் மன்புகழ்
சொல்லிக் கும்மி யடியுங்கடி. (38)

கனிந்த யாழிசை போல மொழிந்திடும்
கன்னிய ரேயம்மை வாய்மொழியை
நினைந்து நினைந்து பச்சிளங் கிள்ளைகள்
நெருங்கிப் பேசுதல் பாருங்கடி. (39)

பாகையுந் தேனையும் போல் மொழிந்திடும்
பாவைய ரேஅம்மை சாயல்கண்டு
தோகை மயில்க ளனைத்துமொன் றாகவே
சூழ்ந் திருப்பதைப் பாருங்கடி. (40)

மீனாட்சி யம்மையே காமாட்சி யம்மையே
மேன்மை மிகுந்திடும் பிள்ளைகளே
ஞானச்சி வானந்த போகங் கொடுத்திடும்
நாயகி மேற்கும்மி பாடுங்கடி. (41)

தங்க வளைய லணிந்திடும் பெண்களே
தாவணி ரவிக்கை பூண்டவரே
பங்கயப் பாதத்தைச் சேர்த்துக்கொண்டு மிகப்
பணிந்து கும்மி யடியுங்கடி. (42)

பூரான் சாடு போட்டிடும் பெண்களே
பொற்கலன் யாவு மணிந்தவரே
நேராக நின்று கைகளைக் கொட்டியே
நெருங்கிக் கும்மி யடியுங்கடி. (43)

பவளத் தாவடம் பூண்டிடும் பெண்களே
பரவாடை யுடுத்தும் பிள்ளைகளே
குவளைத் தேமலர்க் கண்கள் பொருந்திய
கோதைய ரேகும்மி பாடுங்கடி. (44)

கல்லணி யாவு மணிந்தவ ரேமிகுங்
கல்வியெல் லாங்கண்டு தேர்ந்தவரே
செல்வ மிகுந்திடும் மாரியாத் தாள்துதி
செய்து கும்மி யடியுங்கடி. (45)

ஞானம் நிறைந்திடும் பேரின்ப வாரியாம்
நாயகி பொற்பதம் போற்றிசெய்து
வான மதிமுக மங்கைய ரெல்லோரும்
வணங்கிக் கும்மி யடியுங்கடி. (46)

மங்கை சிவகாமி யம்மையே நாந்தொழும்
மாரியம் மன்கும்மிப் பாட்டுரைத்தால்
சங்கையில் லாமலே யெல்லாப் பொருள்களும்
தங்கும் மிகுநலம் பொங்குமடி. (47)

வள்ளியம் மேதெய் வயானையம் மேநலம்
வாய்ந்து விளங்கிய பார்வதியே
தெள்ளமு தோர்வடி வாகி நிறைந்திடும்
தேவியின் மேற்கும்மி பாடுங்கடி. (48)

கன்னி மதியந் தனில்நவ ராத்திரி
கண்டு கொலுவி லிருந்தருளச்
சென்னியி லேகை குவித்து வணங்கிநாம்
சென்ம சவுக்கியங் கொள்வோமே. (49)

பங்குனி மாதந் திருவிழா வந்திடப்
பாங்குடன் றேரின் மிசைவருவாள்
எங்குமோ ராயிரங் கண்களால் நோக்கியே
யின்ப சுகங்களைத் தந்தருள்வாள். (50)

சொல்லவே கேளுங்கள் பெண்டுக ளேயிந்தச்
சோதி சொரூபிதன் னாலயத்தின்
எல்லை யடங்கலும் புட்பக் கடைகளாம்
எங்கு மணக்குது பாருங்கடி. (51)

கமுகு போல வளர்ந்த கரும்பின்
கடைகளின் காட்சியைப் பாருங்கடி
குமுகு மென்னும் பரிமளச் சந்தனம்
கொண்ட கடைகளைப் பாருங்கடி. (52)

தேங்கா யெங்கும் மலைமலை யாகவே
சேர்ந்து குவித்த கடையழகும்
பாங்காய் வாழைப் பழத்தின் குவியலும்
பார்த்து மகிழுவோம் வாருங்கடி. (53)

மாங்கனி யோடு வருக்கைக ளும்மிக
வாசங் கமழ்கனி வர்க்கங்களும்
தேங்குழல் லட்டுமிட் டாயுடன் பூந்தியும்
சேர்ந்த கடைகளைப் பாருங்கடி. (54)

உப்புமா காப்பிக் கடையின் வரிசையும்
உயர்ந்த இட்டலி தோசைகளும்
செப்பம தாகுங் கடலை யவல்களும்
சேர்ந்த வடைக்கடை பற்பலவும். (55)

வெற்றிலை பாக்குகள் விற்குங் கடைகளை
முற்றினு மெம்மால் விளம்பரிதாம்
உற்ற சரிகை ஜவுளிக் கடைதங்கும்
ஒழுங்கைப் பாருங்கள் பெண்டுகளே. (56)

ஆலய நேர்த்தியைப் பாருங்கடி யிங்கே
அன்பர்கள் கூட்டத்தை யோருங்கடி
வேலை முழக்கத்தைப் போல முழங்கிடும்
மேளங்க ளோசையைக் கேளுங்கடி. (57)

பாதச் சிலம்பு கலீர்கலீ ரென்னவே
பங்கயக் கைவளை சோதிமின்ன
வேதப் பொருளெங்கள் மாரியம் மாளருள்
வேண்டிக் கும்மி யடியுங்கடி. (58)

யாரும் மகிழ்ந்து புகழ்ந்து வியந்திடும்
ஆவணங் கொண்ட பெருமைசொல்ல
சேரும் பொருண்மிக்க செந்தமிழ் நாவலர்
சிந்தை யிடத்து மடங்காதே. (59)

வேறு சந்தம்.

மாரியம்மன்கோயிலிலே மணிவிளக்குகளனந்தம்—இன்னம்
மாவிளக்குகளனந்தம்—என்றும்
வந்துவந்துவணங்குமன்பர் மதிவிளக்குகளனந்தம். (1)

மாரியம்மன்கோயிலிலே மல்லிகைப்பூந் தோட்டம்—மிக
வாசமலரீட்டம்—உயர்
வான்பொருந்துந்தேனையுண்ணும் வண்டினங்கள்கூட்டம். (2)

ஞானப்புனல்வாவியிலே நந்தவனஞ்சோலை—யெங்கும்
நாகரீகச்சாலை—வந்து
நங்கையர்நீராடுவதே நாடொறுமேவேலை. (3)

செல்வமிகுங்கரைமருங்கு செண்பகப்பூங்காவே—அதில்
செறிந்திருக்கும்பூவே—நல்ல
தெய்வமணங்கொண்டிலங்குந் தென்றல்வருந்தாவே. (4)

தெப்பக்குளக்கரையோரந் தென்னைமாந்தோப்பு—அதில்
தேங்காய்மிகக்காய்ப்பு—எங்கும்
சீர்பொருந்துமாமரங்கள் செழித்ததென்னவாய்ப்பு. (5)

நீர்பொருந்துங்கரைகளிலே நெல்லிமரந்தோப்பு—அதில்
நெடுநாளுங்காய்ப்பு—எங்கும்
நிரந்தரமாய்க்கனிகனிந்து நிற்பதென்னவாய்ப்பு. (6)

கமலமலர்வாவிபுறங் கமுகமாஞ்சோலை—அங்கே
கணுக்கரும்பினுலை—மிகக்
கமழ்மலர்ப்பூக்கூடையெலாங் கட்டுமலர்மாலை. (7)

நல்லநல்லதீர்த்தமெல்லாம் நாணுமிதைக்கண்டு—நாம்
நன்மையுளங்கொண்டு—அதில்
நண்ணிவிளையாடமிகும் புண்ணியமேயுண்டு. (8)

வேப்பமாஞ்சோலைவிளைந் திருப்பதனைக்குறித்து—நாம்
வியப்பொடுங்குலைபறித்து—அங்கு
வேண்டும்வரம்கேட்பதற்குப் போவோமலங்கரித்து. (9)

புன்னைமரந்தங்கிவளர் புகழைமையென்னசொல்வோம்—நாம்
பொரும்பவத்தைவெல்வோம்—மிகு
புகழ்மிகுந்தமாரியம்மன் பொற்றளிக்குச்செல்வோம். (10)

கொய்யாமரங்கொண்டுமணங் கொண்டகனிவாசம்—நாம்
கூறமிகநேசம்—நம்மைக்
கொண்டவர்க்குக்கொடுத்தோமானல் நீங்காதுசந்தோஷம்.(11)

எலுமிச்சம்பழமாங்க ளிருப்பதுபாரிங்கு—அதி
லேய்ந்தகனிவாங்கு—நமக்
கின்பமுள்ளநாயகர்கைக் கொடுத்தாலன்புஓங்கும். (12)

நந்தவனந்தன்னிலிங்கு நாம்புகுந்துபார்ப்போம்—வாச
நாண்மலர்கள்சேர்ப்போம்—மிக
நாரிலங்கும்பூபாமாலை நன்மையுடன்கோப்போம். (13)

இந்தநல்லசோலையைப்போ லெங்குங்கண்டதில்லையே—புக
ழிசைந்திருக்கும்நலையே—இங்கு
இசைந்ததமிழ்க்கூடமெங்கும் எண்ணமிகுங்கலையே. (14)

மலையாசன்கோயிலங்கே வயங்குதென்னநேர்த்தி—அவர்
மகிமையெங்குஞ்சேர்த்தி—நம்மள்
மனதிலன்புமிகுந்திடவே வணங்கிடுவோம்வாழ்த்தி. (15)

எங்களுக்குவரங்கொடுப்பா ளினியமகமாயி—அவ
ளிலங்கியபொற்கோயில்—இங்கு
இருக்குமலங்காரந்தனை யென்னசொல்வோம் வாயில். (16)

ஆலயத்தின்பேரழகு அமைந்ததையேபேசும்—சொல
அனந்தனுக்கும்கூசும்—அங்கே
அண்டர்புகழ்சோலைமண மெண்டிசையும்வீசும். (17)

இசைமிகுந்தகோயிலிலே யிலங்குபாஞ்சோதி—உல
கெங்கும்வளர்நீதி—என்று
எவ்வுயிருந்தானுக இருந்தருள்வாள்ஆதி. (18)

ஆயிரங்கண்மாரியம்மன் யாரும்புகழம்மை—என்றும்
ஆதரிப்பாள்நம்மை—மிக
அம்பொன்மலர்த்தாள்பணிந்தா லகன்றிடுமேவெம்மை. (19)

மாரியம்மனென்றுசொன்னல் மாதவங்கள்திருந்தும்—மிகு
மகிமையெல்லாம்பொருந்தும்—இந்த
மன்னுயிரெலாந்தழைக்க வந்துதவும் மருந்து. (20)

மாரியம்மனென்றுசொன்னல் மனக்கவலைநீங்கும்—இங்கே
வரும்பிணிபின்வாங்கும்—அணி
மணமலர்த்தாள்பணியநல்ல வாழ்க்கையெல்லாமோங்கும். (21)

மாரியம்மனென்றுசொன்னல் மங்கலமும்பொருந்தும்—மிகு
வளங்களெலாம்திருந்தும்—இந்த
மானிலத்திலெவ்வுயிர்க்கும் வந்துதவுமருந்து. (22)

பொன்போலும்மாரியம்மன் புகழைநிதம்படிப்போம்—மெய்ப்
போதமுடனடிப்போம்—மிகப்
பொங்கியபேரின்பமெனுந் தேனையள்ளிக்குடிப்போம். (23)

நறைகமழுஞ்சோலையிலே நாகணவாய்ப்பிள்ளை—மிகு
நலம்பொருந்துங்கிள்ளை—பேசும்
நாகரீகவார்த்தைகளை நயந்துமனங்கொள்ளே. (24)

ஆயிரங்கண்மாரியம்மை யார்க்குஞ்சுகங்கொடுப்பாள்—நம்மை
யணுகும்பிணிதடுப்பாள்—மிக
ஆக்கமுடன்பணிந்திடும்பே ரன்பருளமடுப்பாள். (25)

வேதமுடனாகமங்கள் வேண்டுகின்றபொருளே—யெங்கள்
வினைகள்தவிர்த்தருளே—சுக
மேன்மையுடனன்மைகளும் மிகவுங்கொடுத்தருளே. (26)

ஓங்காரப்பிரணவத்தி லுதித்ததொருபொருளே—யெங்கட்
குண்மையைத்தந்தருளே—மிக
வோங்குசராசரங்கடொறு முகந்திருக்குந்தெருளே. (27

வானவரும்முனிவர்களும் வந்துதொழும்பதமே—யுன்றன்
மலர்ப்பதங்கள்சதமே—மிக
மாருதஅன்புடனே வணங்கவருணிதமே. (28)

பூழியன்றன்மாநகர்வாழ் பொங்கொளிசேர்மணியே—நல்ல
புண்ணியத்தினணியே—இங்கு
போற்றிசெய்யுமெங்களுக்குப் புகழ்கொடுப்பாய்நணியே. (29

மாந்தரெல்லாம்வாழவந்த மாரியம்மன்நீயே—இந்த
மானிலத்தோர்தாயே—மன
மகிழ்ந்துனையேவணங்கிடக்கண் காட்சிகொடுப்பாயே. (30)

எங்கள்கவுமாரியம்ம னிலங்குமெழில்பாராய்—அவ
ளிருக்குந்தளிவாராய்—மிக
இன்பசுகம்யாவருக்குங் கொடுத்தருள்வாள்நேராய். (31)

ஞானமிகுந்தீர்த்தமிதில் நண்ணிவிளையாடி—மணம்
நாறுமலர்சூடி—யெழில்
நங்கையரேகுரநாட்டுப் பட்டணிவோம்கூடி. (32)

வாசமிகுஞ்சந்தனங்கள் வாங்கியேநாம்பூசி—மன
மகிழ்வுடனேபேசி—நல்ல
மணமலர்கள்சூடியிங்கே வருவோம்கையைவீசி. (33)

எங்கள்பெருந்திரவியமா யிங்குகந்தஅன்னே—அரு
ளேய்ந்ததவப்பொன்னே—மிக
எப்பொருளுமாகியுல கெங்குந்நிறைமின்னே. (34)

மாரியம்மனென்றுரைத்தால் மைந்தர்மிகப்பெறுவார்—உயர்
வாம்புகழேயுறுவார்—என்றும்
மாறுதசெல்வத்தினல் வன்றுயரமருவார். (35)

பஞ்சக்காருபிபயங் கரியெனவேபொங்கும்—உயர்
பாமருளந்தங்கும்—எழில்
பஞ்சவர்னவஞ்சுகத்தைப் பணியுமுலகெங்கும். (36)

பழவடியார்வந்துதொழும் பரமசவுந்தரியே—உல
கெங்கும்நிரந்தரியே—ஒரு
பாகமுகந்தங்கணர்தம் பங்குறைபைங்கிரியே. (37)

எப்போதும்வணங்கிடவே யின்பகலங்கொடுப்பாள்—துய
சேய்க்கவினைதடுப்பாள்—நம்ம
ளிதயகமலத்திலுகந் திருண்மலங்கள்கெடுப்பாள். (38)

தஞ்சமென்றேயுனைவணங்கும் தனயர்களைக்காப்பாய்—உன்றன்
கருணைக்கண்ணாற்பார்ப்பாய்—மிகு
தயவுடன்பேரன்புடையோர் தம்மினத்திற்சேர்ப்பாய். (39)

வாக்குமனங்கடந்தபரி பூரணமாயிலங்கும்—எங்கும்
வானமுதாய்த்துலங்கும்—முந்த
வாய்த்தபழவினைகளினல் வரும்பிணியுங்கலங்கும். (40)

அடைக்கலமாய்வந்தவர்க ளருந்துயரம்போக்கும்—கொடும்
பகைஞர்வலிநீக்கும்—என்றும்
அஞ்சலெனநெஞ்சுவந்து அடியர்களைக்காக்கும். (41)

கருணைமிகுங்கண்படைத்த கற்பகப்பூங்கனியே—உன்றன்
கழல்தருவாயினியே—செழுங்
கமலமலர்த்தாள்பணியுங் காட்சியருணனியே. (42)

இருக்குங்குடிமுதலாக எங்கணுமேயிருந்தும்—எழில்
நல்லையினும்பொருந்தும்—எங்க
ளீஸ்வரியேயெவ்வுயிருங் காக்கும்அருமருந்து. (43)

ஆகியபேரின்பமெலா மமைத்தகளஞ்சியமே—உனை
நினைத்தமனஞ்செயமே—எங்க
ளாதிபாஞ்சோதியுல கெங்கும்நிரஞ்சனமே. (44)

முத்தாலேமூக்குத்தியால் முகமுழுதுந்துலங்கும்—எங்கும்
முதற்பொருளாயிலங்கும்—அருள்
முற்றும்வளர்அம்மையினல் முழுப்பவமுங்கலங்கும். (45)

தரும்முளைபோலெழுந்து தவளநிறங்கண்டு—மிகுந்
தண்பசுமையுண்டு—இந்தத்
தாரணியெல்லாம்புகழுந் தகமையெல்லாங்கொண்டு. (46)

வரிசையுள்ளமுளைப்பாலி வைத்தனையைப்பணிந்து—மலர்
மாலைகளையணிந்து—எழில்
மங்கையரேகும்மிசொல்லி வாழ்த்துமகிடிதுணிந்து. (47)

கனவிலுமுன்பாதமலர் கண்டுபணிந்திடவே—கதி
யென்றுதுணிந்திடவே—மிகு
காட்சிதரும்பாதமலர் ஆட்சியணிந்திடவே. (48)

எந்நாளும்வரங்கொடுக்கும் ஏகபாம்பொருளே—எங்க
ளிதயநிறைந்தருளே—எமக்
கின்பமிகுங்கலைஞானம் தங்கும்படியருளே. (49)

கும்பிடவேவரங்கொடுக்குங் குலதெய்வமுநீயே—அருட்
குணமிகுந்ததாயே—மிக்க
கொடியவராயிருந்திடினும் குறைதவிர்த்தருள்வாயே. (50)

தோத்திரங்கள்சொல்லுங்கடி சுகநலங்கள்தருவாள்--அன்பாய்த்
துதித்தாலுடன்வருவாள்—பரி
சுத்தமில்லாவாக்குமனந் தன்னிலென்றுமருவாள். (51)

சந்திரர்களொருகோடி தழைத்ததுபோலிலங்கும்—மிகத்
தாவர்யமாய்த்துலங்கும்—நம்மள்
தாயார்க்குத்தொண்டுசெய்தால் சகலவினைகலங்கும். (52)

பாற்குடங்கள்வருகிறதைப் பார்த்திடுவாய்மானே—மிகப்
பரிமளங்கொள்தேனே—நல்ல
பஞ்சாமிர்தஞ்சமைத்துப் படைத்ததென்சொல்வேனே. (53)

மாரியம்மன்கோயிலிலே வாய்ந்தவெழில்காணாய்—மன
தானந்தமேபூணாய்—அன்னையை
வணங்காமலிதுவரைக்கும் மறந்துவிட்டோம்வீணாய். (54)

கொட்டகையினேர்த்திசொலக் கூடுமோநம்மாலே—அது
கொண்டவெழிலாலே—எங்கும்
கோலமிகுங்கரும்பினேர் கொண்டிருக்குங்காலே. (55)

கால்களெல்லாம்எலுமிச்சம் பழங்கள்கட்டியிருக்கும்—ஒளிர்
கனகமயம்பெருக்கும்—எங்கும்
கமழ்கமுகம்பாளைகளும் கலந்தணிசெய்திருக்கும். (56)

வாழைமரம்கமுகமரம் வரிசைகளாய்த்தங்கும்—வளம்
வாய்ந்திலங்குமெங்கும்—மிக
வகைவகையாயின்னுமலங் காரமங்கேபொங்கும். (57)

தென்றல்மிகுஞ்சோலைமணம் தேர்ந்துவரும்போது—இங்கு
சேர்ந்தாவிளைப்பேது--நல்ல
தெய்வமணங்கொண்டிருக்குங் கோயிலிலெப்போதும். (58)

போருள்சேரம்பிகையே பிரணவமந்திரமே—நலம்
பெருகியகந்தாமே—மிகப்
பெருந்தகமையெவர்க்குமருள் பெரும்புகழ்ச்சுந்தாமே. (59)

அங்கையற்கணம்மேசீ ஐந்தொழிலும்புரிவாய்—எண்ணி
லாகமங்கள்தருவாய்—உய
ருமறையுங்கடந்தஉப நிடதமுமாய்வருவாய். (60)

சுத்தமிகுமன்பர்மனத் தொட்டிலுகந்தாடும்—பரா
சத்தியென்றேநாடும்—நாம்
தொண்டுசெய்தால்முன்செய்வினைத் தோஷமெல்லாமோடும். ()

எங்களுளக்கமலமிசை யெழுந்தருள்வெள்ளனமே—எங்கு
மிலங்கியபொற்றனமே—ஜெக
தீஸ்பரியேயின்பமழை பொழிந்தருளுங்கனமே. (62)

மாரியம்மன்கோயில்முன்னே மங்கையர்கள்நாடி—மிக
வரிசையுடன்கூடி—பொங்கல்
வைத்திருக்குமலங்காரம் பார்ப்பமடி தேடி. (63)

வேறு சந்தம்.

காலந்தொறுமபிடேகம்புரிந்திடுங்
காட்சியைப்பாடிமானே—இது
போலெங்குங்கண்டிலன் நானே—கற்
கண்டுகலந்திடுந் தேனே—நாம்
கண்களாலம்மையைக்கண்டுதெரிசித்தால்
காலனும்வந்தணுகானே. (1)

புண்ணியதீர்த்தக்கரையிலிருந்தழும்
புத்ரசிகாமணிவாட்டம்—கண்டு
பொற்கிண்ணங்கொண்டமு தூட்ட—வுண்டு
பொங்குந்தமிழ்மறை யீட்டம்—இந்தப்
பூவுலகெங்குந்தழைக்கும்படிசெய்யப்
பூத்தனையேயருளாட்டம். (2)

திக்குவிசயம்புரிந்திடும்நாளினிற்
சென்றுகயிலையைநாடி—வரும்
நந்திகணங்களைச் சாடி—மதிச்
செஞ்சடையாருள் கூடி—நல்ல
செல்வத்திருமணங்கொண்டசர்வேஸ்பரி
சேர்ந்தனளிங்கர்தேடி. (3)

காஞ்சியிலேதவஞ்செய்திடுங்காலையிற்
கம்பைநதிவரமிஞ்சி—அதைக்
கண்டுமனமிக வஞ்சிச்—சேர்ந்து
கட்டித்தழுவிய வஞ்சி—அந்தக்
கண்ணுதலைவிட்டுகண்ணியிங்கெங்களைக்
காக்கவந்தாளருள்விஞ்சி. (4)

ஆங்குகடம்பவனத்தினிலேவிளை
யாடுங்கயத்திளங்கன்று—அரு
ளார்ந்தமரகதக் குன்று—தொழு
மன்பர்புகழ்ந்திடு மன்று—உமை
யாதிபசஞ்சுடராகியவம்பிகை
யாதரிப்பாள்நம்மையென்றும். (5)

அண்ணாமலைதனிலுண்ணாமுலையம்மை
யாகிவளர்ந்திடுந்தாயே—எங்கு
மாகியுகந்தவள் நீயே—உனை
யண்டினேனுன்றன் சேயே—யென்றும்
அன்புதழைந்தநின்பாததரிசனம்
அடியேற்குத்தந்தருள்வாயே. (6)

பேய்முதலானபிணிகளெல்லாமுன்றன்
பேர்சொன்னாலேயோடிப்போகும்—என்றும்
பேசும்புகழ்நன்மை யாகும்—நாம்
பெற்றபவம்பறந் தேகும்—சிறு
பேதையர்செய்தபிழைபொறுத்தாலருள்
பெற்றனைக்கென்குறைவாகும். (7)

மண்டலந்தன்னிலே கண்கண்டதெய்வம்ஸ்ரீ
மாரியம்மையெனக் கண்டோம்—மிக
அன்புளந்தன்னிலே கொண்டோம்—இங்கு
வந்ததுயரெல்லாம்விண்டோம்—உயர்
வானவர்வந்துவணங்கும்நின்பேரருள்
வாரியமுதினையுண்டோம். (8)

மட்டுலவும்பரங்குன்றிலுகந்திடும்
வள்ளிதெய்வானைக்கோர்மாமி—இந்த
வையம்புகழபிராமி—பொன்
மன்றந்தனிற்சிவகாமி—என்றும்
வானகமண்ணுடனேபுவனங்கள்
மகிழ்ந்துபுகழ்ந்திடும்வாமி. (9)

சொல்லரும்பேரின்பவாரியாயிங்ஙனம்
தோன்றியவன்னையேதஞ்சம்—என்று
தோத்திரஞ்செய்குவோர்நெஞ்சம்—நல்ல
சுத்தமெய்ஞ்ஞானமேமிஞ்சும்—அம்மை
சுந்தரஞ்சேராவிந்தமலர்ப்பதம்
சூடினுலோடுமேபஞ்சம். (10)

ஆனந்தவெள்ளமதாகவெழுந்தரு
ளன்னையைக்கண்டாலேநன்மை—மிக
வாற்றலுடன்வருந்தன்மை—என்றும்
அன்புடன்போற்றுதல்செம்மை—அந்த
ஆதித்தன்வந்தவுடன்பனிபோலவே
யகன்றுபோய்விடும்வெம்மை. (11)

வானவரேமுதலோர்கள்வணங்கிடும்
மந்த்ரசடாட்சரரூபி—வந்து
வணங்காதபேர்கட்கரூபி—நாளும்
வையந்தழைக்குங்கரூவி—என்றும்
வஞ்சகமில்லாதநெஞ்சுடையோர்களை
வாழ்விக்குந்திவ்யசொரூபி. (12)

கையில்விளங்கியபச்சிளங்கிள்ளையின்
காட்சியைநோரகப்பாராய்—சிவ
சாட்சியாமம்மையைநோராய்—நின்று
கண்களிகூரவேயோராய்—எங்கள்
கர்மவசங்களெல்லாந்தமுன்மண்டிய
காற்றிற்பஞ்சாமிதுதோராய். (13)

வாசமிகும்பொழில் வீசும்பனிமலர்
வார்ந்தமதுமழையூற்றும்—அங்கு
வாய்க்துலவுதென்றற்காற்றும்—தங்க
வந்திடுவோர்களைப்பாற்றும்—உம்பர்
வானவர்நாடுறுங்கற்பகக்காவிங்கு
வந்திருந்தாலெனத்தோற்றும். (14)

எல்லாவல்லபங்கொண்டபராசத்தி
யென்றுலகெங்கணும்போற்றும்—அந்த
வெண்ணில்வேதாகமஞ்சாற்றும்—பே
ரின்பக்கடல்மழையூற்றும்—எங்க
ளீல்பரீயேபலநாமங்கள்வாய்ந்தனை
யெங்களைவந்துகாப்பாற்றும். (15)

செல்வஞ்சிறந்திடுமாரியம்மன்றனைத்
தேசமெல்லாம்புகழ்ந்தோதும்—ஞான
தீர்த்தந்தனிலேயெப்போதும்—நாம்
சென்றுநீராடினல்போதும்—என்றும்
செய்தபவங்களெல்லாம்பறந்தோடிடும்
தீபத்தின்முன்னிருளேது. (16)

பாற்குடங்கொண்டபிடேகங்கள் செய்கிறார்
பாக்கியவான்களிப்போது—அவர்
பற்றியஅன்புக்கொப்பேது—நல்ல
மோட்சங்கிடைக்குந்தப்பாது—இந்தப்
பாருலகெங்கும்பணிந்திடுமம்மையைப்
பார்த்தாலேநன்மையெப்போதும். (17)

காற்றிலகப்பட்டபஞ்செனவேயெங்கள்
கர்மமெல்லாமஞ்சியோடும்—நல்ல
தருமமெல்லாமிஞ்சிக்கூடும்—அம்மை
கஞ்சமலர்ப்பதம்தேடும்—இன்னம்
கண்களனந்தம்படைத்தருளன்னையைக்
காண்பதற்கேமனம்நாடும். (18)

எங்களருமைப்பெருந்தவத்தாலிங்கே
யெய்துமம்பாள்திருப்பாதம்—தொழ
என்றுங்கிடைக்குமெய்ப்போதம்—இங்கு
நில்லாமற்போம்பவங்காதம்—அன்பா
யெப்பொழுதும்வலம்வந்துவணங்கினல்
இன்பத்துடன்வருகீதம். [19]

அண்டபுவனங்களெங்குஞ்சராசர
மாக்கிவினையிரண்டாக்கி—மெய்
யன்பருளந்தனில்தேக்கி—அவர்
தீமையனைத்தையும்போக்கி—அரு
ளாகமவேதபுராணசொரூபமா
யாவையுங்காத்தனைநோக்கி. (20)

அந்தகன்வந்தனுகாவரந்தந்திடும்
அங்கணர்பங்குறைதேவி—யெங்கட்
கருமருந்தானசஞ்சீவி—அன்பர்
ஆகங்கலத்திடுமாவி—சற்றும்
அறிவிலாப்பேதையாகவிருக்கினும்
அடைக்கலம்காத்தருள்மேவி. (21)

ஆலங்களத்தினில்வைத்தபிரானுட
னுடுந்திரிபுரசூலி—மெய்
யன்பர்தமக்கனுகூலி—நம்மை
யாதரிக்கும்புகழ்வேலி—நல்ல
ஆதிபராஞ்சுடராகிவந்தெங்களுக்
காக்கத்தருங்குணசீலி. (22)

வான்பொருந்தும்புகழ்வெள்விடைமீதினில்
வந்தருள்செய்திடுந்தாயே—உன்னை
வாழ்த்தவரந்தருவாயே—யென்றும்
மறந்துவிடேனுன்றன்சேயே—வரும்
வல்வினையாவுந்தூரத்திமெய்வாய்மை
வழங்கிடுவாயெங்களாயே. (23)

நந்தவனத்துறுங்கந்தமலர்த்தொடை
நாரணிக்கன்புடன்சாத்தி—யெங்கள்
நாவினிலன்புடன்போற்றி—நறும்
நானநெய்யால்விளக்கேற்றி—இங்கு
நங்கையர்யாவருமங்கைமலர்கொடு
நாளும்வணங்குவோமேத்தி. (24)

கண்ணனூர்தன்னிலும்நண்ணியேயன்பரைக்
காத்துரட்சிப்பதுகண்டோம்—உன்றன்
கருணைமழையுளங்கொண்டோம்—எங்கள்
கண்பிணியாவையும்விண்டோம்—கொடுங்
காதகராகியபாதகர்தங்களைக்
கனவுதனிலுமேயண்டோம். (25)

வீடணனுக்கபயாஸ்தங்கொடுத்திடு
மேகவண்ணன்றங்கைவாராய்—எங்கள்
மீதுகடைக்கண்ணாற்பாராய்—வந்த
வெவ்வினையாவையுந்தீராய்—பொங்கும்
வீரர்களாகியசூரர்கள்நீறெழ
வேல்தந்தவள்வாந்தாராய். (26)

உக்கிரசிங்கத்தின்மேல்வருமம்மையை
யுலகமெல்லாந்தொழுதேத்தும்—நம
தூழ்வினையாவையுமாற்றும்—நல்ல
உண்மைப்பொருள்களைச்சாற்றும்—மிக
வுயர்ந்தமாமுனிப்பாலிகொண்டெல்லோரும்
உச்சிதமாய்நின்றுபோற்றும். (27)

சூலத்துடன்பச்சைவேப்பிலைகொண்டகைத்
தூயவளேகமதன்னே—யென்று
தோத்திரஞ்செய்வதற்கென்னே—அருள்
தோய்ந்தவரந்தருமின்னே—நல்ல
சுத்தமிகும்மனப்பக்திவலையினில்
தோன்றிடுவாள்கண்கள்முன்னே. (28)

ஆதிமூலமென்றயானையைக்காத்தரு
ளச்சுதனார்திருத்தங்கை—நாத
லங்கனார்பக்குறைமங்கை—மிக
ஆரணம்போற்றிடுகங்கை—மெய்
அன்பரைக்காப்பதற்கிங்குகந்தாளதி
ஞலிந்தத்தீர்த்தமேகங்கை. (29)

காஞ்சனமாலைமுன்செய்ததவத்தினுக்
காகக்கருணையேகூர்ந்து—தழல்
கான்றிடும்வேள்வியிலார்ந்து—அருள்
தோய்ந்தகுழவியாய்ப்போந்து—நலங்
காட்டுந்திருவிளையாட்டுகந்தாள்தனைக்
காணுவோம்போற்றுவோம்சேர்ந்து. (30)

விருத்தம்.

தெய்வ சிந்தனை மேவும் சிறப்பினர்
மெய்ய றம்புரி கின்ற வியப்பினர்
துய்ய சாவி முனிவரிற் றேன்றினேர்
வைய கந்தனில் வாழியெங் காளுமே. (31)

சேரு மன்புட னேதினந் தோறுமே
ஆர ணங்தொழு மம்மையைப் போற்றுவோர்
பாரி லெங்கும் படிப்பவர் கேட்பவர்
யாரு மின்ப மமைந்திட வாழியே. (32)

வேறு.

அன்றுபாற் கடலமு தருந்தி வானுளோர்
என்றுநீ டுழிவாழ் திருக்குந் தன்மைபோல்
இன்றுமித் தமிழமு தருந்தி யேவரும்
நன்றிபெற் றுவப்பவெந் நாளும் வாழியே. (33)

வேறு.

அன்னை நின்பெருங் கருணையா லித்தமி ழலங்கல்
தன்னை யோதிய சவுடயன் சந்ததம் புகழ்ந்து
பொன்னின் மாமலர்ப் பூங்கழ லிணைகளைத் துதிப்ப
உன்னு நல்வரம் யாவையுங் கொடுத்துவந் தருளே. (34)

வேறு.

முக்கனி யாமென மூன்று சந்தமாய்
இக்குடன் சருக்கரை யினிய தேனையும்
கற்பகக் கனியொடு கலந்த தாமெனத்
தக்கதாய்க் கும்மிசொற் றழைக்க வாழியே. (35)

வேறு.

பதம்நி னைந்திடு மன்பருக் கருள்பரா பரியை
நிதம்ப ணிந்திடும் நியமமாஞ் சாலிமா தவரி
லுதய மாம்புகழ்ச் செல்வரிப் பனுவலை யுவந்து
சதமெ னும்பொரு ளெமக்குநற் பரிசுதந் தனரே. (36)

முற்றிற்று.